818

உ

ஸ்ரீ கணேசாயநம:

# திருவண்ணுமலை ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் சரித்திரமும்,

அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# ஸ்ரீ அண்ணுமலையார் தோத்திரப்பாமாலையும்,

இவை

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் பாதசேகரரான,

திருவண்ணுமலை ஈசானிய மடாலயம்

ஸ்ரீமத் சி. சுப்பைய சுவாமிகளால்

இயற்றப்பட்டும் பரிசோதிக்கப்பட்டும்,

சென்னை

“ஆனந்தபோதினி” அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கவும்பட்டன.

25-7-1921

[விலை அணு 4.

O23:38.21BJR
M21
125192

உ

ஸ்ரீ கணேசாய நம:

# திருவண்ணாமலை ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் சரித்திரமும்,

அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# ஸ்ரீ அண்ணாமலையார் தோத்திரப்பாமாலையும்,

இவை

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் பாதசேகரரான,

திருவண்ணாமலை ஈசானிய மடாலயம்

ஸ்ரீமத் சி. சுப்பைய சுவாமிகளால்

இயற்றப்பட்டும் பரிசோதிக்கப்பட்டும்,

சென்னை

"ஆனந்தபோதினி" அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கவும்பட்டன,

---

25-7-1921

[ரிஜிஸ்டர் காபிரைட்]

[விலை அணு 4.

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
NO. 15, VENKATESAMAISTRY STREET,
SOWCARPET, MADRAS.

உ

ஸ்ரீ கணேசாயநம:

# முகவுரை.

அன்புடையீர்! சான்றோரது பாததூளியாற் பவித்திரமாக்கப்பட்ட நந்தமிழ் நாட்டிலே சிறந்து விளங்குந் தொண்டைநாட்டிலே க்ஷீரநதிதீரத்திலே இலங்கானின்ற இராயவேலூரிலே 190 வருடங்களுக்கு முன் தெய்வத் திருவருளாலவதரித்தவரும், துரியாதீத நிஷ்டை கூடிச் சிவானுபவச் செல்வராய் விளங்கியவரும், இன்றைக்குத் தொண்ணூற்றிரண்டு வருடங்களுக்கு முன் திருவண்ணாமலையென்னுந் திவ்யக்ஷேத்திரத்திலே ஈசானிய பாகத்திலே திருக்கோயில் கொண்டெழுந்தருளியவருமான ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகரென்னு மிப்பெரியாரது புண்ணிய சரித்திரத்தையும், அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீ அண்ணாமலையார் தோத்திரப் பாமாலையையும்; நம்மனோர்களுக்கு ஸ்ரீ குருமூர்த்தியின் அன்பையும், ஈசுவரபக்தியையும், வளர்ப்பான் வேண்டி, ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின் பாதசேகரரான திருவண்ணாமலை ஈசானிய மடாலயம் சி. சுப்பையசுவாமிகள் தாம் பல முதியோரிடம் பன்னாட்கேள்வியுற்றபடியும், பல ஏடுகளில் வரைந்திருந்த வண்ணமும், பல சாதுக்களும் அருணை வாசிகளும் இச் சரித்திரத்தையும், தோத்திரப் பாமாலையையும், அச்சியியற்றி யளிக்கவேண்டுமென வேண்டிய தற்கிணங்கி அச்சியற்றி யளித்தனர். இவ்வீசானிய ஞானதேசிகர் செய்யப்பட்ட நூல் பலவற்றிலுங் கிடைக்காதிறந்தனபோக வேனைய இத்தோத்திரங்களைப் பாராயணஞ்செய்து ஸ்ரீ அண்ணாமலையார் கிருபையையும் தேசிகரருளையும் அடையும் பொருட்டு அச்சிடப்பட்டன. ஆதலின், இஃது ஒவ்வொருவர் கையிலும் என்றும் இலகத் தக்கது. இம்மகானது சகவாசியான ஸ்ரீ கோயிலூர் முத்திராமலிங்க ஞானதேசிகரின் விதேககாலம் இன்றைக்கு 74 வருடமும் ஸ்ரீ உகந்தலிங்க ஞானதேசிகரின் விதேககாலம் 103 - வருடமும் தமது விதேககாலம் 92 - வருடமுமாகின்றன.

சீர்மருவுந் திருவருணை யீசான தேசிகரின் றிறங்கள் யாவுந்
தார்மருவுஞ் சிதம்பரதே சிகனுவிச் சகாயத்தைத் தவிர்ந்து மோனப்
பேர்மருவுஞ் சிவானந்த பூதிவடி வாயிலகும் பெருமை சான்ற
யேர்மருவுஞ் சுப்பைய தேசிகனேர் புத்தகமா யியற்றி ஞனல்

**சு. பிரகாசாநந்தன்.**

கோயிலூர்க் குசுமாஞ்சலியில் எழுதப்பட்டுள்ள குரு பரம்பரையின் விளக்கம், சரியாக இல்லை யென்று ஸ்ரீமத் வீர. நாராயண சுவாமி முதலிய சாதுக்கள் சொல்லியபடிக்கு ஒத்துக்கொண்டு அந்த பரம்பரையை கை தவருக நான் எழுதி யிருப்பதால் அது நீக்கி யேனையவற்றைச் சாதுக்கள் கொள்ளவேண்டும்.

**தி. ஈ. சி. சு.**

## ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகரின் பரிபூரண காலகவி.

திருவளர் மதியு நதியுட னிதழி சேர்ந்திடுஞ் செஞ்சடா டவியுஞ் செங்கையின் மழுமா னணிந்திடுஞ் சிறப்புந் திகழுமை யுடன் மழ விடையும், உருவளர்ந் திருக்கு மியலது தணந்து வுலகினிற் பருவமா ணுக்க ருய்ய தத்துவத்தி னிலையறி வித்து ஓங்கிய நிட்டைசா தித்து, மருளது திருந்தும் படிகுரு வடிவ மாகியே யருணையம் பதியி லணிவரை யீசா னியமதில் விளங்கி யன்பர்க டுதிக்கச் சின் மயமாய், மருவின ததுவி ரோதியாந் தனுர்நன் மதியினி லிருபதோ ராறில் வளர்குரு வார மான்றலை திரையோ தசியெனு வழுத்துநற் றின்மே.

## ஐந்தாம் பட்டமாசிரியர் ஸ்ரீ மஹாதேவ சுவாமிகளின் பரிபூரண காலகவி.

சீர்மணக்கு மருணைகிரி தனின்மேவு மீசான தேசி கன்றன், பேர்மணக்கு மரபில்வரு மாதேவ முனிவனெனு மியற்கைப் பேரோன், நேர்மணக்கு விளம்பிவரு டமேட மாதிரைபஞ் சமியா நேர்ந்து, நார்மணக்கு மன்பர்பலர் போற்றநன் முத்திநிசை நண்ணி ஞனே.

முகவுரை முற்றிற்று.



திருவண்ணாமலை-ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர்

# ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் தோத்திரம்.

நேரிசை வெண்பா.

இருவர்முன் சென்றடையா வீசனீன்ற யானை
யருணேசர் தேசிகரி னன்பா—மருட்பாடி
பாமாலைத் தோத்திரத்தாற் பற்றியாமின் புற்றிடவே
பூவான்மால் போற்றடிகட் பார். (1)

கழிநெடி லாசிரிய விருத்தம்.

அளவிறந்த பிறவிதொறு மடைந்தவனை யழியா யரும்பவத்தை யகற்றுகில்லா ளதனாலுன் னடியில், உளமதனை யொடுக்கியொரு வழியறிய வுற்று யுய்ந்திடவே வந்தடைந்தே னுயிர்த்துணையா யுன்னை, யிளநிலவு மறிமழுவு மெம்மையுட னிவரு மிளவிடையுநீத்தென்னை யிரட்சித்திட வந்தோய், வளமுலவு மருணையினிலீசான மருவி மகிமையுடன் தேசிகராய் வளர்ந்தசிகா மணியே. (2)

கரமதனி னெல்லியெனக் கற்றறிந்த மேலோர் கழறிடினுமொருசிறிதுங் கல்லாத தீயேன், வரமுடைய ரமணரிஷி முதலான வானோர் வழங்கியுமப் பதமறந்துன் சந்நிதிவந் தடைந்தேன், பரமனின தருள்விரும்பிப் பெற்றிலனு யாகிற் பெறுங்கதியா னெவ்வண்ணம் பற்றிடுவேன் பகர்வாய், புரமதன னருண்கிரி யீசானம் போந்தான் புண்ணியரென் தேசிகரின் பொன்னடிகட் போற்றி. (3)

தேசார்ந்த பூதரத்திற் றெரிசனத்திற் றெட்டா திகழுகின்றதீரமுடைச் சித்தர்குழு வதுவுந், தாசார்ந்த பாவமுடன் றமைமறந்து சாருந் தண்ணருளா லுன்னுடைய சித்தியுற்று ராகில்,ஆசானுபந்தமுடை யடியேங்க ளுய்ய வாதார நின்னருளை யன்றிகதி காணேம், பூசார்பி லுற்றமகட் பொலியருணை யீசா புண்ணியநந்திசையுறையுந் தேசிகபொன் மணியே. (4)

மாடுமக்கண் மனைவிசுற்ற மைந்துடைய மரபோர் வந்தகுலமெத்தவென மாண்டழியா வண்ண, மோடுகையிற் கொண்டுன்றன் உண்மையிது வென்று வுற்றுணர பற்றறவே வுரைத்ததயாநிதியின், மாடுநின்று பாடுவோர்கண் மரபினராய் வந்து வாடாத மலரடியை வாழ்த்திடுவாய் நெஞ்சே, வீடுகண்ட வருணைதன்னினீசானம் விளங்கு விமலகுரு தேசிகன்றன் விரைமலர்கட் போற்றி.

வேறு.

இளமைமுதல் நிலையன்று யெனத்துறந்து மீறில்லாச் சிவானுபவ மினிதா யார, வளம்பெறுகுந் தாய்தந்தை தாரமனை மைந்தரெலா மாயமென நீத்தார் மேலோர், உளமதனி லவையுனைத்துமொருவாத. வோர்விலியேற் குயிர்த்துணைநீ யென்று வந்தேன்,

வளம்பெருகு மருணையினி லீசான மமர்ந்தகுரு தேசிகனே வாழ்த்து கின்றேன். (6)

வேறு.

உலகினி லனந்தம் பெரியவ ரிருக்க வுன்றனை யுற்றயா னிரத்தல், சலமுடை யனந்தம் பிறப்பினிற் சலித்துச் சென்துவின் குணமதைச் சார்ந்தேன், நிலவிடுங் கானி லுழுவையு முன்றன் சீடருளார்ந்ததா லடியேன், அலகிடா வருணை வாழுந்தே சிகநின் னடியிணை முடிபெற வாக்காய். (7)

ஒன்றினு ளொன்று யுற்றிடு முடம்பு மூன்றையு முதறியே தனித்து, நின்றிடு மறிவை நிசமென வுணர்ந்து விளங்கினர் ஞானிகளதுவாய், பொன்றிணி யருவிப் பொங்கிசு ழருணை புலர்ந்திடும் பூரணப் பொருளா, யின்றுநீ யீசா னியமதில் விளங்கி யெனக்கருள் தேசிக சிவமே. (8)

இம்மையி லுள்ள பிணியெலா மறுத்து மினிமையா முடம்பினை யீயுஞ், செம்மைநின் பாத தூளியன் பருக்குச் செய்கதி யிதுவெனத் தமியேன், வெம்மையாங் காம வெகுளியென்கின்ற வினையதை யறுத்திடவந்தே, னம்மைநின் பாத மருந்ததையு தவியகற்றுவாய் தேசிக மணியே. (9)

வேறு.

எண்ணிலாக் காலந் தன்னு லிவ்வுடல் யானென் றென்னி
கண்ணிலா மார்த ரென்னக் கலங்கினேன் நற்றாய் காவாய்
திண்ணிய தவத்தாற் றெய்வத் திருவரு ளையினி லுற்ற
புண்ணிய வீசா னத்திற் புலர்ந்திடுந் தேசி கோனே. (10)

வேறு.

சித்தம தற்று லக்காற் சிவமதா யிருந்தே னேனு
மொத்திடு யோகாலன்றி யுற்றிடே னதனுன் வந்தேன்
பித்தனென் றென்னை நீக்காய் பெருமநின் பெயர்தா னோங்க
சத்திய வீசா னந்தேர் தேசிக போற்றி காவாய். (11)

நேரிசை வெண்பா.

சோணு சலமுனி தேசிகர் சீரது
வாணு ளெனநா வழங்கலே—வீணு
பவப்பிணித் தேவனே போக்கிடு மீதே
தவத்தவர் செய்கைத் தகும். (12)

திருவண்ணுமலை ஈசானியமடாலயம்,

சி. சுப்பைய சுவாமி.

சிவமயம்.

ஸ்ரீ தேசிகர் துணை.

# ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் சரித்திரம்.

## அருட்குரு வணக்கம்.

நெடுங்கால மிவ்வுடலை நானெனவே நினைந்துள்ள நீருவண்ணஞ்
சுடுங்காம வெகுளியினாற் றுயருழந்த சிறியேற்குஞ் சுகத்தைக் காட்
யடும்பாச மகல்வித்த சிதம்பரஞா னாசிரிய னருளாற் சோதி [டி
விடுஞ்சோண கிரிமேவு மீசான்ய தேசிகர்சீர் விளம்பு வேனே

## ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் வணக்கம்.

அருளுருவா யடியவர்கட் குருண்முகிலாய கண்டா காரப்
பொருளுதுவாய்ப் புலியுடனே விளையாடும் புனிதனாகுந்
தெருளுருவா யருணைநக ரீசானத் துறைதேவ தேவனான
மருளறுக்கு மீசான தேசிகன்றன் மலரடியை வாழ்த்து வோமே.

பூலோகத்திலே தொண்டை நாட்டிலே க்ஷீரநதி தீரத்திலே இராய வேலூரிலே வேளாளர் குலத்திலே திருநீலகண்டதேசிகரும் அவரதுபத்தினி உமைய பார்வதியாரும், குருலிங்க சங்கமங்களில் பேரன்புடையவராய் இல்லறத்திலே யினிதுவாழ்ந் திருந்தனர். அவர் தமக்கோர் புத்திரனில்லாமையால் நெடுநாளாய் வருந்தி திருவருணையிலுள்ள ஸ்ரீ முருகப்பெருமானை யுபாசித்து அவரருளால் ஒரு புத்திரனைப் பெற்று முருகவேளின தருளா லவதரித்த வக்குழந்தைக்குக் கந்தப்பனென்னுந் திருநாமமிட்டனர். கந்தப்பர், குழந்தைப் பருவத்திலே பல திருவிளையாடல்களை யியற்றி ஒரு காலத்தில் மூன்றுநாள் காறும் யாருமறியா வண்ணம் மறைந்திருந்தனர். பள்ளியில் உபாத்தியாயர்

பாடங்களைக் கற்பிக்கு முன்னமே அப்பாடங்களை யொப்பு வித்துவிட்டு ஆண்டும் நிட்டைகூடி மௌனமாயிருப்பர். அது கண்டு உபாத்தியாயரும் அவ்வூராரும் இவர் தெய்வீகத் தன்மை யுடையவரென்று நினைத்து வந்தனர். இவரது அளவுகடந்த ஆச்சரியச் செயல்கள் பலவுங்கண்டு இவரது பிதா இவருக்குத் திருமணஞ்செய்யாமலே ஏழாவதுவயதில் ஆசாரிய வபிஷேகஞ்செய்து தமது வேளாளர் மரபினர்க்குச் சிவதீக்ஷை செய்துவைக்குங் குருத்தன்மையை விளக்குந் தேசிகரென்ற பட்டமிட்டுச் சிவபூஜையு மியற்றுவித்தனர். அன்று முதல் கந்தப்பதேசிகர் பதினாறுவது வயதுவரை யிலும் நியமத்துடன், சிவபூஜையிற் றற்பரராய் எப்போதுந் தியானத்தோடுங் கூடியிருப்பர். பிதாவான திருநீலகண்ட தேசிகர் புத்திரனுக்குப் பருவகாலம் வந்தமையால் அவ ருக்குத் திருமணஞ் செய்யவேண்டி உறவினர் வீட்டிற்குக் கன்னிகையைத் தேடிச்சென்றனர். அதனை யுணர்ந்த கந் தப்பதேசிகர் தமது மாதாவினிடம் "நான் சமுசாரியாக மாட்டேன் நமது பரம்பரையை யடிமைகொண்ட சிவபெரு மான் வீற்றிருக்குந் திருப்பதிகளைத் தெரிசித்துப் பேரானந்த மடைய என்மனமெழுகின்ற" தென்று கூறி எங்ஙனமோ மாதாவின் மனமகிழ்வால் விடை பெற்றுக்கொண்டு பூமிப் பிரதக்ஷணமாய்ப்புறப்பட்டுச் சென்று ஆங்காங்குள்ள தீர்த் தங்களில் மூழ்கிச் செபித்து மூர்த்திகளைத் தியானித்துத் துதித்துத் தரிசித்துக் கொண்டு செல்லுங் காலத்திலே, ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தை யடைந்து நடேசப்பெருமானைத் தரிசித்து, ஸ்ரீ சபாநாயகருக்கு வோர் நித்ய அகண்ட தீபக் கட்டளையை யேற்படுத்தி ஆண்டுள்ள தீக்ஷதர்களால் செப் புப்பட்டயம் ஒன்று அளிக்கப்பட்டு, அந்த க்ஷேத்திரத்தி லுள்ள ஆயிகுளத்தின் வடகரையில் அகோ ராத்திரஞ்

சமாதிபுரிந்திருக்குஞ் சித்தபுருஷரான, ஸ்ரீ மௌனசுவாமி களைத் தெரிசித்து இனி நாமுந்துறவியாய் இவர்பால் உப தேசம் பெறவேண்டு மென்னு மெண்ணத்தால் சிலகால மந்த க்ஷேத்திரத்திலே பிக்ஷையால் சரீரதாரணஞ்செய்து கொண்டு காலை மாலை யென்னுமிரண்டு காலங்களிலும் ஸ்ரீ மௌனசுவாமிகளைத் தெரிசித்துக்கொண்டு வந்தனர். ஒரு நாள் நாம் பக்குவமடையாமையால் நமக்கு வுபதேசஞ் செய்யவில்லை யென்று அதிக தீவரமான விரத்தியால் தாம ணிந்திருந்த வஸ்திர மனைத்து நீத்து கௌபீனதாரி யாய் ஸ்ரீ மௌனசுவாமிகளைத் தரிசிக்கச் சென்றனர். அப் போது மார்கழி மாதமானதால் பனியும் மழையும் குளிரு மதிகமாயிருந்து மவற்றிற் கஞ்சாமற் சரீரநடுக்க மின்றி யன்றுபெய்த மழையில் நனைந்துகொண்டுவந்து தேசிகர் தம திடத்து வணக்கமுற்றிருப்பதைக் கண்ணுற்று அன்றுத் தம்மீது யாரோ போர்த்திருந்த கம்பளத்தை யெடுத்துத் தேசிகருக்குப் போர்த்தி உணரவேண்டியயுண்மையை யுப தேசித்து ஆண்டே தியானத்தோ டிருக்கச்செய்தனர். அத்தியான விசேஷத்தால் சிலசித்திவிளங்கியது. அதனால் தமது குருமூர்த்தியான ஸ்ரீ மௌன சுவாமிகளின்மேல் "நித்யபரிபூரண" வென் றாரம்பித்துப் பஞ்சரத்தினமென்ற வோ ரற்புதமான தோத்திரப் பாமாலையை யியற்றிச் சித்தர் களுக்குரிய யோகதண்டு யோகப்பட்டை முதலியவற்றைக் கையிற்கொண்டு திகம்பரராய்ச் சடாமகுடந் தரித்து ஸ்ரீ மௌன சுவாமிகளிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட் டுச் சென்று திருவாரூரை யடைந்து ஸ்ரீதியாகராஜப் பெரு மானைத் தெரிசித்து ஆண்டு மடப்புறத்தில் நிலவுகின்ற மஹா சித்தமூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திச் சுவாமிகளு டன் சிலகாலம் கூடியிருந்து திருநாகைக் காரோணம் போ கையில், சிக்கல் என்ற க்ஷேத்திரத்தை யடுத்த பொருள்

வைத்தசேரியில் பிரம்மானுபவ நிஷ்டராய்ப் பல சீடர்களுக்கு ஞானோபதேசஞ் செய்துகொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ உகந்தலிங்க ஞானதேசிகரைத் தெரிசித்து, ஆண்டு சிலகாலம் வாசஞ்செய்து சம்பாஷித்துக்கொண் டிருந்து பின்பு நிருவிகற்ப சமாதி கூடவேண்டுமென்று நிர்ஜனப் பிரதேசம் போக விச்சித்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டு வடதிசையை நோக்கிவந்து திருவண்ணாமலைக்கடுத்த வேட்ட வலத்திற்குச் சமீபமான பாக்கத்து மலையிலே யுள்ள வோர் பெரிய குகையிலே யாரும் அறியாவண்ணம் பல வருஷங்களாக நிருவிகற்ப சமாதி கூடியிருந்தனர். அப்போது அவ்வூரிலே தொழுவேளாள ஜாதியிலே யிருந்த முத்துச்சாமி உடையா ரென்பவர் தாம் மேய்க்கு மாடுகளிலே பால்கறந்து நாடோறும் தேசிகருக்குக் கொடுத்துக் கொண்டு வந்தார். இப்புண்ணிய பலனால் அவர் வீடுகட்டு நிமித்தம் அடிப்படையிட நிலத்தைத் தோண்டும்போது அவருக்கு நிதிக்குவிய லொன்று கிடைத்தது. அதனாலவர் சிறிது நாளிலேயே அதிக தனமுடையவராய் விளங்குவதைக்கண்ட அவ்வூரார் இவருக்கு நிதி கிடைத்தமையை யுணராதவர்களாய் இப்பெரியாரன்றோ தமக்குப்பாலுபகரித்த வுரிமையால் இரசவேதனத்தால் நாணய மளித்திருக்கின்றார் என்று, மருண்ட மனத்தராய்த் தேசிகரிடம் வந்து பலவிதமாய்த் துதித்து ஸ்வாமிகளே! முத்துச்சாமி உடையாருக்கு அனுக்கிரகம் பண்ணியதுபோல் எங்களுக்கு மனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்றுச் சொல்லி நிட்டைக்கு இடையூறாய்க் கூட்டமிட்டனர். அதுகண்டு ஸ்ரீதேசிகர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு யாரும் அறியாவண்ணம் வந்து ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையார் வீற்றிருக்கும் சோணசைலத்தின் தென்மேற்கிலுள்ள கோரக்கநாதரது

குளக்கரையின்மேல் நிஷ்டைகூடி யிருந்தனர். அவ்வூரிலே யிருந்த வருணாசலஞ் செட்டியா ரென்னு மொருவர், நெடு நாளாய் தனக்கோர் புத்திரனில்லாமையால் மனம் வருந்தி யிருக்கும்போது பெரியாரருளால் புத்திரப்பே றுண்டா மெனப் பலர் சொல்லக் கேட்டுப் பெரியாரைத் தேடிச் சென்று, கோரக்கநாதர் குளக்கரையில் நிட்டைகூடியிருக் குந் தேசிகரைக் கண்டு வணங்கிப் புத்திரப்பேற்றை விரும் பியவராய் தொண்டுத் புரிந்து அன்புசெலுத்தி வந்தனர். ஆண்டு கோபாலர் பலர் பால் முதலிய வுணவுப்பொருள் களை யளித்து வந்தனர். அதைத் தேசிகர் மனமகிழ்ந்து ண்டிருப்பர். இங்ஙன மிருக்கும்போது ஒரு நாள் அவ் வருணகிரியில் விழிப்புலனிற்கு வெளிப்படாது வாசம்புரி யுஞ் சித்தர்கள் வந்து ஸ்ரீ தேசிகரை யழைத்துக்கொண்டு போய் மனித சஞ்சாரமின்றிய மலைக்குகையில் வைத்திருந்த னர். அங்கு அதிகமாய்ப் பலித்துக் கிடந்த பழ முதலிய வற்றைப் பார்த்து, இக்கனியில் ஒன்றை அருணாசலஞ் செட் டியாருக்கீயின் நற்புத்திரப்பேறுண்டாமென்று ஸ்ரீ தேசி கர் திருவுளத்தே சங்கற்பித்தனர். அதையுணர்ந்த சித்தர் கள், "அவ்வாறே வுலகவனுக்கிரஹ இச்சையை நிறைவேற் றுவாயாக" வென்று வேண்டிய பழங்களுடன் ஸ்ரீ தேசி கரை, அக்குளக்கரையிலே கொண்டுவந்துவிட்டுச் சென்ற னர். ஸ்ரீ தேசிகர், தமதன்பராகிய வருணாசலஞ் செட்டியா ருக்குப் பழத்தையளிக்க;வதுகாரணமாக வேலாயுதஞ் செட் டியாரென்னும் ஒரு நற்புத்திரனை ஈன்றார். அவ்வேலாயுதஞ் செட்டியார் புத்திரராகிய முருகப்பச் செட்டியார், தமது பிதா மகரான வருணாசலஞ் செட்டியாருக்கு ஸ்ரீ தேசிகர் அளித்தருளிய விபூதிப்பையினை, இன்றும் வைத்துப் பூசை புரிந்து தங்களுக்கு வருமிடையூறுகளனைத்தையும் அதனல்

நீக்கிக்கொள்கின்றனர். இங்ஙனம் யாருமறியாது ஸ்ரீதேசிகர் வந்த நாண்முதல் பாக்கத்துக் கிராமவாசியான முத்துச்சாமி உடையார், தேசிகரைக் காணாமையால் மனமிகவருந்தி துயருற்றிருக்கும்போது கருணாமூர்த்தியான ஸ்ரீ அருணாசலேசுவரர் அவரது சொப்பனத்தில் ஸ்ரீ தேசிகரைப்போல் விளங்கி, "அப்பா நீ வருந்தவேண்டாம். நாம் அருணாசலத்தின் ஈசானிய பாகத்திலிருக்கின்றோம் அங்கு நீ வரக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்து ஸ்ரீ தேசிகரிடம் வந்து தமது மங்களவடிவத்தைத் தரிசிப்பித்து "அப்பா! உன்னைக்காண ஓரன்பனை ஈசானிய திசைக்கு வரும்படியாய்ச் சொல்லியிருக்கின்றோம் நீயுமங்கு போகக்கடவாய்" என்று சொல்லி, அந்தர்த்தானமாயினர். அக்கருணாமூர்த்தியின் கருணைத்திறத்தை நினைத்து நினைத்து ஸ்ரீ அண்ணாமலையார் தோத்திரப் பாமாலை யென்னும் சில வருட்பாடல்களைப் பாடிக்கொண்டு ஈசானிய திசைக்கு ஸ்ரீதேசிகர், எழுந்தருளிவந்து தொழுவேளாளர் குலத்திற்குப் பொதுவான அண்ணாமலையார் பூந்தோட்டத்திற்குச் சார்பான மாமரங்களும் செடிகளும், சூரைப் புதர்களும், நெருங்கின ஈசானிய தீர்த்தத்தின் தென்கரையிலுள்ள ஒரு பெரிய வாலமரத்தின்கீழ் சிவயோக சமாதிபுரிந்திருந்தனர். பாக்கத்து வாசியான முத்துச்சாமி உடையாரென்னுமன்பர், பொதிமாட்டி லரிசி முதலியவற்றையேற்றிக்கொண்டுவந்து ஸ்ரீதேசிகரைத் தரிசித்து வடங்காத வானந்தக்காட்சியி லாழ்ந்தி அடியவர்க்கு வமுதளித்துச் சென்று, ஸ்ரீ தேசிகரை விட்டுப் பிரிய மனமில்லாதவரா யிடையிடையே வந்து தெரிசித்துப் போவார். அக்காலத்தில் ஸ்ரீ தேசிகர் அறுபது வயதையும் நீண்டு பறந்த சடாபாரத்தையும் திக்காடையையு் முடையவராய் சதாசமாதியோக நிஷ்டாபரராய் விளங்கினர். அப்போது

ஸ்ரீ அண்ணாமலையார், பயங்கரமான வரிப்புலியாய் வந்து ஸ்ரீ தேசிகர் நிஷ்டை கூடியிருக்கும் காலத்தில் யாதொரு இடையூறும்வாராவண்ணம்,சமீபத்தில் காவலாய்ப்படுத்துக் கொண்டிருப்பர். ஸ்ரீ தேசிகர், நிஷ்டை கலைந்து சமீபத்திற் படுத்துக்கொண்டிருக்கும் வரிப்புலியைக் கண்ணுற்று, ஸ்ரீ அருணாசலேசுவரரே இவ்வடிவந் தாங்கி நமக்குக் காவலா யிருக்கின்றனரென்று மிகவு மகமகிழ்வுற்று அப்புலியின்மீது தமது திருக்கரங்களால் "அண்ணாமலையே என்னரசே!" யெனப் பலவாறு வழைத்துத் தடவிக்கொண்டிருப்பர். இதனையுணர்ந்த மற்றைய காட்டுப் புலிகளும், தமது வினத்தின் வாஞ்சையால் ஸ்ரீ அண்ணாமலையாராகிய வரிப்புலியைப் பின்பற்றி தேசிகரது சமீபத்தில் வந்து காவலாய்ப் படுத்துக்கொண்டிருப்பன. தமதன்பர்கள், தம்மைத் தெரிசிக்கவருங்காலத்திற்புலிகளைப்பார்த்து உங்களைக்கண்டு அன்பர்கள் பயமடைவார்களாதலின் சற்று விலகி யிருங்களென்று, திருவாய் மலர்ந்தருளுவார். அது கேட்டுப் புலிகள், விலகி நிற்பினும் நிற்கும் அல்லது தமது மலைக்குகைகளுக்குச் செல்லினுஞ் செல்லும். அவ்வன்பர், தரிசித்துச் சென்றதுஉளம் தேசிகர் சமாதிகூடி நிற்பர். மீண்டு வரிப்புலிகள், அவ்விடம் வந்து காவலா யிருப்பன. சில சமயங்களில் ஸ்ரீ தேசிகர் சமாதிகூடி நிற்கும்போது அன்பர்கள் வந்து சமீபத்திற் படுத்திருக்கும் வரிப்புலிகளைப் பார்த்து அவைகள், விலகும்படிப் பயப்பட்டுக் கரகோஷஞ்செய்வார்கள்; அது சமயம் ஸ்ரீ தேசிகர், கண்விழித்துச் சற்று விலகியிருக்கும்படித் திருவாய் மலர்ந்தருளுவர். இங்ஙனம் ஸ்ரீ தேசிகரின் றிருவிளையாடற்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் போது கூடலூரைச் சார்ந்த தென்பேர் புதுப்பாளையமென்னுங் கிராமத்திலிருக்கும் ஒரு நாய்க்கர், தமக்குற்ற சூலையென்னும் பெரும்பிணியாற் றுன்பஞ் சகிக்கொணாதவராய்,

வருத்தமுற்று ஸ்ரீ அருணாசல க்ஷேத்திரத்திற்கு வந்து அக் காலத்துள்ள கொடி வழி மார்க்கமாய் கிரி பிரதக்ஷணஞ் செய்து வருகையில் ஸ்ரீ தேசிகரைத் தரிசித்து இப்பெரியா ராலே இப்பெரும்பிணி விலகுமென்று நம்பிக்கை யுடை யவராய் ஸ்ரீ தேசிகரை வலம் வந்து நமஸ்கரித்து ஸ்வாமி இந்நோய்நீங்கும்படி யருள்புரிய வேண்டுமென்று பிரார்த் தித்தனர். அவர் மீதிரக்கமுற்று அந்நோய்நீங்கும்படி திருக் கண்சாற்றியருளவும் வியாதி சூரியனைக்கண்ட பனிபோல் விலகிற்று. அத்திருவிளையாடலைக்கண்டு ஆச்சரியமுற்று இப் பெரியார்க்கடிமையாயிருத்தலன்றோ நமக்குற்ற கடமை அதனால் நமது ஜென்மமுஞ் சாபல்யமாமென்று நிச்சயித்து உஷீன சந்நியாசத்தைவஹித்து ஸ்ரீதேசிகரது சன்னிதிக்கு அடிக்கடி வந்து தரிசித்துப்போவார். அதனால் அவருக்கு அநாயாசமாய்க் கல்விப்பேறுண்டானது. அதனைக்கண்ட தமது வூரிலுள்ள சுற்றத்தவர்கள் அவண்வந்து ஸ்ரீதேசிகரி டம் உத்திரவுபெற்று அவரை யழைத்துக்கொண்டு போய் ஈசானியசுவாமியென்று அவருக்குத் திருநாமமிட்டு அவர் பாற்பலர் சிரவணஞ்செய்துவந்தனர். அச்சுவாமிகள் விதேக கைவல்லியமடைந்தபின்னர் சமாதியாலயமுமடமுங்கட்டி ஸ்ரீ தேசிகர் மகிமை யோங்கும்படி ஈசானியசுவாமி சமாதி யென்ற பெயரானேயே யின்றளவும் வழங்கிவருகின்றனர். ஒருநாள் ஒருகரடி மிகுந்த பசிவருத்தத்தினால் ஸ்ரீதேசிகோ த்தமரை மிகுந்தகோபமுடையதாய் அடித்துக்கொல்லும் பொருட்டுச் சமீபத்தில் வந்தது; அதுகண்டு அங்கோர் மா மரத்தடியில் ஸ்தாபிக்கப் பெற்றிருந்த விநாயகசிலாவிக்கி ரகமானது ஓடி யக்கரடிமேல்விழ அக்கரடி வுயிரிழந்தது. அதனாலவ்விநாயகருக்குக் கரடி விநாயகரென்றும், மாமரத் தடி விநாயக ரென்றும், பெயரிட்டு இன்றளவும் வழங்கு கிறது. இடையிடையேவந்து ஸ்ரீ தேசிகரைத் தரிசித்துப்

போகும்வழக்கமுடைய பாக்கத்து வாசியாகிய முத்துச்சாமி உடையார் ஒருநாள் தமது மரபினர்க்கெல்லாமுணர்த்தி நமது தோட்டத்தில் இப்பெரியார் வந்து தவம்புரிய நாம் எப்புண்ணியத்தைப்புரிந்தோமோ வறிகிலேம் என்று சொல்லி நமது நந்தவனத்திற்குக் கட்டுப்படுத்தி வைத்திருக்கு மிவ்விடத்தினை யிப்பெரியாருக்கே தானஞ் செய்துவிடுவது நலமென்று தீர்மானித்து மூன்றிலொரு பாகம் வடபுறமாகத் தானஞ்செய்தனர். ஸ்ரீ தேசிகர் ஈசானிய திசையிலிருத்தலின் ஈசானியஞான தேசிகரெனவன்றுமுதல் விளங்கினது. பிணியாளர்பலர் வரின் அவரது பிணிகள், ஸ்ரீ தேசிகரது கிருபையால் மருந்தருந்துத லின்றியே நீங்கிவந்தன. ஸ்ரீ தேசிகரின் முக்யசீடருண் முதன்மையரான நாகபட்டணம் இராமலிங்க சுவாமிகள், புதுச்சேரி அருணாசலசுவாமிகள், பாக்கத்துவாசி முத்துச்சாமி உடையார், அருணைவாசி அருணாசலஞ் செட்டியார், என்னுமிவருள் அருணாசல சுவாமிகளின் சந்ததியார் ஒருவரு மில்லாமையா லவர்தனமனைத்துங் கொள்வாரின்றிப் பிரஞ்சுதேசத்தரசர் பாலிருந்தன. அப்போது அருணாசலச்சுவாமிகள், தேசிகரிடம் ஸ்வாமின்! யான் புதுவைக்குச் சென்று எனது குடும்பத்தவரின் திரவியமனைத்தையும் பூர்வாசிரமந் தரித்து வாங்கிவருகின்றேனென்றனர். அதற்குத்தேசிகர் "அப்பா நமக்குப் பணமும் வேண்டாம் கொண்ட வேடத்தையுங் களைதல் கூடாது நீ மீறிப்போனால் மீளவுமாட்டா"யென்று திருவாய் மலர்ந்தருளினர். இங்ஙனந் தேசிகர் கருணையாற்கூறிய மொழிகளனைத்தையுங்கடந்து புதுவைக்குப்போய் பூர்வாசிரமந்தரித்துக்கொண்டு எமக்குச் சேரவேண்டிய வெமது சந்ததியார் சொத்தை யெமக்களித்தல் முறையாமென்று தக்க சாக்ஷிகளுடன் அரசாங்கத்தவர்யாற் சொல்லி சொத்தை வாங்கி யேலம்போட்டுப் பவுணாக மாற்றிப் பொதிமாட்டி

லேற்றிப் "போபோமாடே" யென்று வதனையடிக்க யென்று மிகச்சாந்தமான வம்மாடுந் திடீரென்று திரும்பிக் குத்தி அவரது குடலொழுகச் செய்தது. அதனால் அவராண்டு விதேககைவல்லியமடைந்தனர். அப்போது அவ்வரசாங் கத்தார் அவருடைய ஞாபகார்த்தமாய் சிலையினால் அவரை யும் அவ்வெருதினையும் அப்பணச்செலவால் புதுவை முத் தியால்பேட்டைக்கடுத்த கரடி குப்பத்தின் மேற்புறத்தில் செய்துவைத்திருக்கின்றார்கள். அது இன்றளவும் ஸ்ரீதே சிகருடைய ஞாபகார்த்தமாய் விளங்கிவருகின்றது. அக்கா லத்தில் அருணாசலத்திலிருந்து விருத்தாசலம் வரையிலும் ஜில்லா கலெக்டர் அதிகாரமுடைய ஐடன் துரையென்பவ ரொருவர், இத்தேசிகோத்தமரது மஹிமைகளைக் கேள்வி யுற்று ஸ்ரீதேசிகரைத் தெரிசிக்க வருங்காலத்தில் தேசி கர் சமீபத்திலிருந்த வரிப்புலியைப்பார்த்து "அண்ணாமலை யாரே! ஓர் ஐரோப்பியன் வருகின்றான் அவனுன்னைக்கண்டு பயமடைவான் ஆகையால் சற்று விலகியிருமென்று" கட் டளையிட வரிப்புலியும் விலகியது. துரையும் வந்து ஸ்ரீதே சிகரைத் தெரிசித்து நெடுநாளாய்த் தனக்குற்ற காச வியாதியின் வலியைச்சொல்லி அது விலகும்படி யருள்புரிய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். ஸ்ரீதேசிகர் புன்னகை புரிந்து கருணையாலதை விலகும்படி திருவுளத்திற் சங் கற்பித்துக் காறித் துப்பினர், வியாதி யுடனே நீங்கிவிட் டது. அதைக்கண்டு துரையும், மிகுந்த வாச்சரியத்தையும் அன்பையும் பயத்தையு முடையவராய் ஸ்ரீதேசிகரை நோக்கி "ஸ்வாமின்! யான் இப்போது வேண்டிய பூமிகளைப் புதிதாகச் சேர்த்திருக்கிறேன்; அதில் தேவரீருக்கு எவ்வளவு வேண்டினும் தானசாசனஞ் செய்துவைக்கிறேன்; அது நீடூழி தேவரீருக்குச் சாசுவதமாகு"மென்று சொன்னார். அதைக் கேட்டு ஸ்ரீதேசிகர் புன்னகை புரிந்து மழைவறண்டகால

த்திலும் உமது பூமி விளையுமோவென்று பரிகசித்து இதோ இரண்டு குழந்தைகளுடன் ஒரு பெருங்குடும்பியுளன் அவனுக் கெவ்வளவு பூமிதானஞ் செய்தாலுந் தகும் பரதேசியான நமக்குத்தகுதிய தாகாதென்று ஸ்ரீ உண்ணுமுலை சமேத வண்ணாமலையாரைத் தமது திருக்கரத்தாற் காட்டித் திருவாய் மலர்ந்தருளினர். உடன் துரை மிகுந்த பயபக்தியோடு விடைபெற்றுப்போய் அடிக்கடி வந்து தெரிசித்துக் கொண்டு போவார். தானெந்த காரியத்தைச் செய்யவாரம்பித்தாலும் ஸ்ரீ தேசிகரைத் தியானித்து "தாத்தாவே நீ யிக்காரியத்திற்கு முன்னிரு நீயேசெய்" என்று சொல்லி தொடங்குவதை வழக்கமாக வுடையவரா யிருந்தார். ஸ்ரீ அண்ணாமலையார் இரதோத்ஸவத்திலும் முதல் தாம் வடம் பிடிக்கையில் "தாத்தாவே நீபிடி முன்னிரு" யென்று கூறுவர். அதைக்கண்ட ஜனங்கள், இவரிடத்துள்ள ஸ்ரீ தேசிகரினன்பின் பெருக்கைக் கண்டு ஆச்சரிய மடைவார்கள். பின்போர் காலத்தில் பெண்ணைநதிக்குத் தெற்கிலிருக்கும்போது இரதோத்ஸவகால மிகச்சமீபித்தபடியால் இரதத்தை நடத்திவைக்கும் பொருட்டு அருணையினை நோக்கி வந்துகொண் டிருந்தனர். அப்போது பெய்தமழையின் மிகுதியால் பெண்ணைநதியி னிருகரையு நிறம்பிய நீர்ப் பிரவாஹத்தால் கடந்துவர முடியாதவராய்த் திகைத்து நின்று நாமினித் தாமதித்தால் அண்ணாமலையார் இரதோத்ஸவம் நடைபெறாதென்று நினைத்து தாமேறிவந்த குதிரையைப் பார்த்து "ஏ குதிரையே தாத்தாவைப் பார்க்க வேண்டும் இரதத்தையும் நடத்தவேண்டும் நீ தாத்தாவை நினைத்துக்கொண்டு இந்த வாற்றைத் தாண்டுவாய்" என்று சொல்லி அடித்தனர். உடனே குதிரை திடீரென்று ஜலத்திலிறங்கி ஒரு அபாயமுமில்லாமல் அக்கரைக்கு அனாயாசமாய் விரைவாகக் கொண்டு வந்து சேர்த்தது. அதைக்

கண்டு இருகரையும் இரங்கமுடியா திட்கார்ந்திருந்த ஜனங்கள் மிக்க வாச்சரியமடைந்தார்கள்.

அப்போது திருவருணை யீசானியத்தி லிருந்த ஸ்ரீ தேசிகர் கண்விழித்து தென்பக்கமாகத் திடீரென்று கையை நீட்டி இடதுபக்கம் மெதுவாகத் தாழ்த்தினர். அதனை யருகிலிருந்து பார்த்த ரகை இராமலிங்க சுவாமிகள் ஸ்ரீ தேசிகரைநோக்கி ஸ்வாமின்! தியானத்திலிருந்து திடீரென்று கண்விழித்துக் கையைநீட்டி மெதுவாக இடதுபக்கமாய்த் தாழ்த்திய காரணத்தை வடியேங்களுக்கு தயையாற் றெரிவிக்கவேண்டு மென்று பிரார்த்திக்க வதற்கு ஸ்ரீதேசிகர் "எவனுற்றில் விழுந்தாலும் அதற்கு நாம் உத்திரவாதியாக வேண்டுமோ" மென்று திருவாய்மலர்ந்தருளி மௌனமாயிருந்தனர். ஐடன்துரை சுகமாக வருணைவந்து சேர்ந்து ஸ்ரீ தேசிகரைத் தெரிசித்து தேவரீரது கிருபையா லபார ஜலத்தைக் குதிரையுடன் றாண்டிவந்தே னென்று சொல்லிப் பரவசமுற்றார். பிறகு ஸ்ரீதேசிகரது உத்தரவினல் அண்ணாமலையார் இரதோத்ஸவத்தையும் வழக்கம்போல் நடத்திவைத்தனர். இங்ஙனம் ஸ்ரீ தேசிகரது திருவிளையாடற்களைக் கண்டு கேட்ட ஜனங்கள் ஸ்ரீ தேசிகரது சன்னிதியை மிகுந்த வன்புடையவர்களாய் விட்டு நீங்காதிருந்தார்கள். அப்போது வரிப்புலிகள் மிகுதியும் வருவதில்லை. பின்பு சிலபக்குவிகள் மோக்ஷசாதன விருப்பினர்களாயிருத்தலைக்கண்டு அவர்பொருட்டு ஞானக்கட்டளையெனப் பெயரிய ஓர் அரிய நூலினையியற்றி யுண்மையை யுபதேசித்து வருங்காலத்தில் அவ்வடியவர்கள் வசிக்கும்பொருட்டு அவ்வருணசல வாசிகளால், ஸ்ரீ தேசிகர் விரும்பியபடி ஒரு பர்ணசாலை யமைக்கப்பட்டது. அக்காலத்தில் ஸ்ரீ கோவிலூர் முத்திராமலிங்க ஞானதேசிகர் ஈசானிய ஞானதேசி

கரின் விருத்தாந்தங்களைக் கேள்வியுற்று தெரிசித்துப்போ வோமென்று வந்தபோது தேசிகரின் ஏவல்பூண்டிருந்த பாக்கத்து வாசியான முத்துச்சாமி உடையார், முத்திராம லிங்கஞானதேசிகரின் விரலிலிடப் பட்டிருந்த கல்லிழைத்த மோதிரமொன்றைப் பார்த்து, இது மிகவழகான பிரகாச முடையதென்றனர். அது கேட்டு, இப்பிரகாச முனக்கே யிருக்குக வென்று கழற்றிக்கொடுத்து தமது பற்றற்றபா வத்தை நன்குவிளக்கிச் சிலகால மீசானிய தேசிகரிடம் வசித்துக் கோவிலூருக்குச் சென்றனர். திருவண்ணாமலைக் கடுத்த மண்டகுளத்தூரிலே கர்ணிகர் குலத்திலே இருந்த சபாபதிபிள்ளை யென்பவரொருவர் விதிப்படி இல்லறத்தை நடத்திவந்தனர். அப்புண்ணியத்தால் உலகப் பற்றற்று பரம் பொருளைக் காணும் பற்றுடையவராய்த் துறந்து ஸ்ரீ சத்கு ருவைத் தேடிச்சென்று திருக்கச்சிக்குப்போய் ஸ்ரீ காமாக்ஷி சமேத ஏகாம்பரநாதரைத் தரிசித்து அன்றிரவு தனது மனோபீஷ்டத்தை ஸ்ரீ காமாக்ஷியம்மையின்பால் சொல்லிப் பிரார்த்தித்துக் கொண்டு கம்பாநதி தீர்த்தக் கரையில் துயில் கொண்டனர். அவரது சொப்பனத்தில் உலகமாதா வான காமாக்ஷியம்மை ஒரு கன்னிகையாக விளங்கி அப்பா நீ வருந்தவேண்டாம் திருவண்ணாமலையின் ஈசானியபாகத் தில் வீற்றிருக்கும் சித்தரிடம் போய் உனது குறைவுபாட் டை நீக்கிக்கொள்ள வேண்டியது என்று திருவாய்மலர்ந் தருளி மறைந்தனள். உடனே திடீரென்று சபாபதிசுவாமி கள் விழித்து அம்பிகையென்று தெரிந்து அன்று முதல் தேவி யுபாசனையையும் அதிகமாய்ச் செய்துகொண்டு திரு வருணைக்கு வந்து ஸ்ரீ தேசிகரைத் தரிசித்து வலம் வந்து துதித்து வணக்கத்தோடும், ஆண்டுச் சிலகாலந் தொண் டியற்றிக்கொண் டிருந்தனர். இவரது பக்குவத்தைக்கண்டு

ஸ்ரீ தேசிகர் இவருக்கு ஆன்மோபதேசஞ்செய்து தியானத் திலிருக்கச் செய்தனர்.

அப்போது தேசிகர் கிருபையாலும் அம்பிகை கிரு பையாலும் ஸ்ரீ சபாபதி சுவாமிகளுக்கு சமஸ்கிருத பாஷை யில் அதிக பண்டிதத்தன்மை யுண்டாயிற்று. சபாபதிசுவா மிகள் தனக்கு நிஷ்டைகூடாத காரணத்தை தேசிகரிடம் தெரிவிக்க அதற்குத் தேசிகர் வித்யாதானஞ் செய்தால் பிரதிபந்த நீங்கி நிஷ்டைகூடு மென்று திருவாய் மலர்ந்த ருள. உடனே சபாபதிசுவாமிகள் விடைபெற்றுக்கொண்டு போய் மண்டகுளத்தூரி லிருந்த சில வேதியச் சிறுவர்க ளின் விருப்பின்படிக்கு சமஸ்கிருத வித்தையைத் தானஞ் செய்து தடைநீங்கி நிஷ்டைகூடி அம்பிகையின் கிருபை யால் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த தனது சகாபாடிக்கு உயிர்கொடுத்தும், மேட்டுப் பாளையத்தில் சில சீடர்களுக்கு வேதாந்தபாடம் ஓதிவைக்கையில் நீரால் விளக்கெறித்தும், இன்னுமிவை முதலிய திருவிளையாடற்களைச் செய்து ஆண் டுத் திருக்கோயில் கொண் டெழுந்தருளினர். அதனலிப் போது அங்கு ஸ்ரீ தேசிகர் மகிமை யோங்கும்படிக்கு மட மும் ஆலயமுந் தடமுமிடம்பெறக் கட்டப்பட்டு நித்திய பூஜையாதி நடந்துவருகின்றன.

கோரக்கநாதர் குளக்கரையிலே ஸ்ரீ அண்ணமலையார் தரிசனங் கொடுத்த காலத்தில் தாமியற்றிய அண்ணமலை யார் தோத்திரப் பாமாலை, வெண்பா, அந்தாதி, கண்ணி முதலிய பிரபந்தங்களையும் பல சீடர்களுக் குபதேசித்துக் கொண் டிருக்கையில் ஸ்ரீ உகந்தலிங்க ஞானதேசிகரின், விதேககால மாரம்பித்தமையை ருதம்பர வுணர்வால் உணர்ந்து சிநேகவாஞ்சையால் பல சீடர்களுடன் புறப்பட் டுச்சென்று பொருள்வைத்த சேரியையடைந்து ஸ்ரீ உகந்த

லிங்க ஞானதேசிகரைத் தெரிசித்ததும் சகவாச அன்பால் ஸ்ரீ தேசிகரின் வரவை யெதிர்பார்த்திருந்த உகந்தலிங்க ஞானதேசிகர் மனமகிழ்வோடு விதேக கைவல்லிய மடைந்தனர். அத்திருமேனியை யங்குச் சமாதிவைக்க வொட்டாது அவ்வூரார் தடைசெய்ததைப் பார்த்து ஸ்ரீ தேசிகர் அவர்க ளறியாவண்ணம் தமது மகிமையால் ஆண்டே சமாதி வைத்தனர். மறுநாள் அதையுணர்ந்த அவ்வூரார் மீண்டுங் கலகஞ்செய்யக் கூட்டமிட்டனர், அதைக்கண்டு ஸ்ரீ தேசிகர் புத்திரபௌத்தர பாரம்பர்யத்தை கெடுதியின்றி நீங்கள் விரும்பியவர்களானல் ஜிதேந்திரியரான துறவிகளுடன் விவாதஞ் செய்தல் இல்லாதிருக்க வேண்டுமென்று மிகப் பயமுறுத்த வதற்கவர்கள் இவ்வருணைச் சித்தரது சாபமிகப் பொல்லாததெனப் பயந்து விலகிவிட்டனர். அச்சமாதிக்குச் செய்கடன்முடித்துச் சீடர்களுடன் ஸ்ரீ தேசிகரருணைக்கு வந்து முன்போல் சிலகாலம் ஆன்மோபதேசாதி திருவிளையாடற்களைச் செய்துகொண்டிருக்கும்போது தமது விதேககால மாரம்பித்ததை யுணர்ந்து சிலநாளுக்கு முன்பே ஒரு ஓலையில் பரிபூரணமாகுங் காலத்தை வரைந்து தமது ஆசனத்தின் கீழ்வைத்து கலியுகம் 4930க்குச் சரியான சாலிவாஹன சகாப்தம் 1751க்கு விரோதி வருஷம் மார்கழிமாதம் 26ம் தேதி குருவாரம் மிருகசீர்ஷநக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் ஸ்ரீநடராஜப் பெருமான் (ஆயிரங்கால் மண்டபத்தில்) அறைக்கட்டுக்குப் போகின்றார் நாமுமங்குப் போகவேண்டுமென்று தமது முக்கியமான சீடர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளி பத்மாசனத்திலிருந்து உத்திரமுகமாய் சின்முத்திரை தரித்து சிறிது அலர்ந்த நோக்காய் சமாதிகூடி அகண்ட சச்சிதானந்த பிரஹ்ம பாவத்தை யடையும்போது பாக்கத்து வாசி

யான முத்துச்சாமி உடையார் அடியேங்களுக்கு கதி யாதோவென வினவ அதற்குத் தேசிகோத்தமர் உமது குடும்பம் முன்னமே கோத்தோடே பழுத்துப்போயிற்றே'' என்று திருவாய் மலர்ந்தருளிப் பரிபூரண பாவத்தை யடைந்தனர். அதுகண்ட அருணைவாசிகளும் அடியவர்களும் அத்திருமேனியைச் சமாதிவைக்க இடத்தை நிச்சயிக்கும் போது ஸ்ரீ தேசிகர் சிலகாலம் அவ்வாசிரமத்தின் சமீபத்தி லுள்ள ஒரு வில்வக் கண்ணடிக்குச் சென்று அண்ணுமலே யாரை நோக்கி நின்று திரும்பி வந்திருந்த குறிப்பை யுணர்ந்தவர்கள் அவ்விடமே தகுதியானதென்று நிச்சயித்து வாண்டு அத்திருமேனியைச் சமாதி வைத்தனர். ஸ்ரீ தேசிகரிஞசனத்தின்கீழ் வரைந்து வைத்திருந்த தமது விதேக கால நிச்சயத்தைக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அவ்வருணைவாசிகளும் இப்போதுள்ள வேட்டைவலம் ஜமீன்தாரவர்களின் பாட்டியாரின் தாயாரும் அச்சமாதியாலத்தையும் கோபுரத்தையும் மடத்தையும் சுதையாற் கட்டிச் சமாதி ஸ்தானத்திலோர் சிவலிங்கத்தையும் ஸ்தாபித்து ஆண்டு குருசம்பிரதாயம் விளங்கிவரும் பொருட்டு தேசிகரின் முக்ய சீடரான நாகபட்டணம் இராமலிங்க சுவாமிகளுக்கு, அபிஷேகஞ் செய்து மடாதிபதியாகவும், குருஸ்தானமாகவும், ஏற்படுத்தினர்கள். பூஜையாதி காரியங்களையு மொழுங்குபெற நடத்திவைத்தார்கள். கெடார் முதலிய சில கிராமங்களில் ஸ்ரீ தேசிகருக்கு பூமி தோப்பு முதலிய சில ஸ்தாவர சொத்து அன்பரால் தானஞ் செய்யப்பட்டு மிருக்கின்றது. பாக்கத்து வாசியாகிய முத்துச்சாமி

வுடையார் சந்ததியாரனைவரும் ஞானிகளாய் விதேகமோக்ஷ மடைந்தார்கள். அதனாலவர்கள் செல்வ மனைத்தையுங் கொள்ளும் பந்துக்களில்லாமையால் அரசாங்கத்தார் கைக் கொண்டனர். இங்ஙனம் ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் பரம் பரையில் நாகபட்டணம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளும், தஞ் சாவூர் மஹாராஜாவின் மைத்துனரான ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளும், ஸ்ரீ சொரூபானந்த சுவாமிகளும், ஸ்ரீ அந்த தாதாவான மஹாதேவ சுவாமிகளும், ஸ்ரீ சதானந்த சுவாமி களும், பரம்பரையாய் அபிஷேகிக்கப்பட்டவர்களாய் குரு ஸ்தானத்தை வஹிக்கு மாசார்யர்களாய் விளங்கினார்கள். 6-வது பட்டத்தாசிரியராகிய சதானந்த சுவாமிகள் ஸ்ரீ தேசிகர தாலயத்தையும் மடத்திற் சிலது பாகத்தையும் சிலையாலியற்றிச் சாசுவதமான ஸ்தாவர சொத்துக்களையும் சேகரித்து வைத்தனர். இப்போது அந்த ஸ்தானத்தில் ஸ்ரீ அண்ணாமலை சுவாமிகளென்னும் மஹாதேவ சுவாமி கள், ஆசாரியராய் விளங்குகின்றனர்.

இங்ஙனம் பரம கருணாநிதியாகிய ஸ்ரீ ஈசானிய ஞான தேசிகரின் சரித்திரச் சுருக்க முற்றிற்று.

## சிதம்பரம் ஸ்ரீ மௌனதேசிகரின்மேல் ஸ்ரீ ஈசானிய தேசிகர் திருவாய் மலர்ந்தருளிய பஞ்சரத்தினம்.

நித்யபரி பூரண வகண்டசா க்ஷாத்கார நிர்மலா னந்தமய மாய் நிர்க்குணவிசாலமாய் வாக்குமனமணுகாத நிர்வாண மோனவ டிவாய், சத்யவருண் மேனிகொண் டுலகிலவ தாரமாய்த் தானெ ழுந் தருளிவந்து சமயநிலை யாவையு மொருசமன தாகவே தான் கண்டு மேலாகவே, முத்திமுத லானநின் னருள்சேர்ந்த வன்பரடி முடியாக வைத்து நின்னை மூவுலகு தொழுதில்லை யம்பலந டம்புரியு முதல்வனென வேநம்பினே, னத்தியுரி போர்த்தவா வத்தமதி கூவிள மணிந்தவா கெங்காதரா வாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு மானசிவ ஞானகுருவே. (1)

கல்லாலி னீழலிற் சென்றிருந் தாயமல காருண்ய வடிவமாகி கண்மூன்று நவ்விமழு கையினிடை யேந்தியொரு காலதனின் மாயை யெனுமேற், செல்லாம லேமிதித் தங்கிருந் தேநால்வர் செப் பரிய முத்தி பெறவே சித்தாந்த வேதாந்த சமரச முணர்த்தியவர் சிற்சொருப மெத்தவதனு, லெல்லாரு மிந்தவழி யாகவர வென்று லகி லேழையடி யார்களிடமா யின்பமத னுன்மனுட ரென்றவடி வாமென்ன வென்பதொரு கோலமுடனே, யல்லாது வவதூத வே டமது காட்டிவெகு வாயடியர் சென்று தொழவே யாயிகுள மேவி வளர் மோனகுரு நாதனெனு மானசிவ ஞானகுருவே. (2)

சஞ்சல விதத்தொழில் புரிந்துமன மானது சகத்திடை நடி க்கு மேன்மேற் சாலங்கள் செய்துவெகு வாகநின் றேயொருவர் தானுநிக ரில்லை யெனவே, வஞ்சகக் கள்வரென நிற்கின்ற வைம் புல வழிக்கோட் டரசு செய்து வாதாடி யேசுழலு மென்னசெய் வேனதனை வலிமெத்த வாகை யாலே, தஞ்சமென நின்னருளை நம்பினே னென்னைநீ தற்காத்து யிரக்ஷி கண்டாய் சர்வபரி பூரண வகண்டதத் துவமான சச்சிதா னந்த சிவமா, யஞ்சலென வேகர மமைத்துவட நீழல்வள ராதியே யம்பு லித்து ளாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு மானசிவ ஞான குருவே. (3)

கற்றகலை நூற்பல பிதற்றியுல கத்தினிற் கண்கெட்ட குருடரைப்போற் கண்மூடி, மனநினைவி லெண்ணாது வெண்ணியே கங்குல் போலஞ் ஞானமே, யுற்றவநு பவமாகி மெத்தவெரி யினர்போல வுழல்கின்ற நாயி னேனு மூர்ப்பன்றி போலமல மாயைகன் மத்துளன் றறிவுகெட் டிடாம லென்றன், சித்தமது தெளியவொரு வித்தைநிலை யருள்வையோ சின்மயா னந்த வடிவே சிற்சொ ரூபமா யறிவு தற்சொ ரூபமா யடியர் துக்கமது தீர வெனவே, யத்த மதி லேஞான முத்திரை பிடித்துவரு ளாநந்த மேவடி வமாய் ஆயிகுள மேவிவளர் மோனகு ருநாதனெனு மானசிவ ஞான குருவே.

வேதாக மங்கள்பல கலைகளை யுணர்ந்துமென் வேதாந்த சித்தாந்தநூல் வித்தார மாகவே கற்றுமென் னப்பொருள் விளங்கவொரு வர்க்கோதியென், பேதாதி மயமான சமயநடை சார்ந்துமென் பிறவிவினை தீர்க்கவெளிதோ பிறங்குமொளி வீசியுன் னருளுதய மாகின்ற பேரின்ப நிட்டையருள்வா, யோதாதி மொழி ஞான முத்திரை கரத்தினிடை யுண்மையிது வென்றுகாட்டி வுள்ளபடி யறிவித்து மறியாத வென்போலு முயிர்கடமை யாண்டுகொள்வா, யாதார பாதமல ரீதென்று காட்டிநட மாடுதிரு வம்பலத்து ளாயிகுள மேவிவளர் மோனகுரு நாதனெனு மானசிவ ஞான குருவே. (5)

ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் திருவாய் மலர்ந்தருளிய
பஞ்சரத்தின முற்றிற்று.

---

125192

உ

ஓம் தத் ஸத்.

# ஸ்ரீ அருணாசலேசுவரர் பேரில்
## ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர்
திருவாய் மலர்ந்தருளிய
# ஸ்தோத்திரப் பாமாலை.

---

### ஸ்ரீ கணபதி துதி.

மரணமெனும் பகைவனைக்கண் டுளநடுங்கி யிதர்க்கேது வழீ யென் றெண்ணி, யருணையனே யெனச்சார்ந்து அவனருளாற்றுயர மதையகற்ற வின்று, தருணமெனத் தமிழதனாற் றோத்திரத்தாற் போற்றிசெயத் தக்க தாக, கருணைபுரிந் தருளுதவுங் கரிமுகவ னிரு கழல்கள் கருத்துள் வைப்பாம். (1)

### ஸ்ரீ அண்ணாமலையார் துதி.

அருளுருவா யனல்வடிவா யயன்மாலுக் கெட்டரிதா யகண்டா காரப், பொருளெனவே நிச்சயித்து நின்னடியார் நின்பெருமை புகழ்ந்தார் நின்னைக், குருவெனக்கண் டதிசயமாய்க் கொண்டனன் யான் என்னயென்னக் கூறி னாலும், பெருமைபுக ழருணகிரிப் பெம்மானே யென்று யான் பேசு கேனே. (2)

சண்டமா ருதச் சுழிதனிற்றிரண மென்ன வெகு சாலங்களுண்டுபண்ணுஞ் சங்கற்ப மானபெரு மாமாயை யென்பதே சகத்திரள தாயிருந்து, கண்டதே யல்லாது மெய்யென்று யித்தைநான் கருதிநிச மென்றிருந்தேன் கல்லாத வறிவினாற் பொல்லா தமாயையிற் கட்டுண்ட நாயினேனைத், தொண்டருட நீயுமே நின்று விளை யாடியே சொருபநிலை யதனிலென்னைச் சொல்லாது சொல்லியே நின்பதச் சேவையிற்சும்மா விருக்கயருள்வாய், அண்டரீ நான்முகன் கண்டுதொழ வரிதான வானந்த பரமகுருவே யத்தனே நித்தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (3)

பொல்லாத மனமெனும் பேய்பிடித் தைம்புலப் பூதங்கள் பயமுறுத்தப் பொய்யான லோகமும் மெய்யாக யென்முனே போராடி நிற்குதந்தோ, கொல்லாது கொல்லுதே காதல்மா மோகங் குணங்கள் வினையால்மெலிந்து கூருன வேல்விழி மாதரென் கின்றதோர் கூபத் திலேவிழுந்து, எல்லாரு மேசவே நெஞ்சந் திடுக்கிட் டிறங்கியே தலைசாய்க்கவோ என்னைப் படைத்து விட்டாயிந்த வுலகினி லெளியேனை யிரக்ஷிகண்டாய், அல்லாது சும்மா யிருந்துவிட் டாலடிமை யார்பா லெடுத்து மொழிவேன் அத்தனே நித்தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே.

பொய்யறிவி னுன்மனம் பூதமுட னைம்புலன் பொல்லாத கள்வ ரிவர்கள் பொய்யான லோகத்தை மெய்யா யிருத்தியென் புந்திக்கு ளிந்த்ரசாலஞ், செய்யாது செய்யுதே மாதற்சிற் றின்பவலை சேர்ந்துமே யடியுண்குதே தேராதுவீணிலே மாமோக மானதோர் சேற்றிலே விளையாடுதே, மெய்யாக வேயிந்த பொல்லாத கள்வரை வெல்லவோர் வழியில்லையோ மேலான தெய்வமென் றுன்னையே நம்பினேன் மெலிவுதீர்த் தருள்செய்குவாய், ஐயனே நின்னிட மடைக்கலம தாயினே னடியேனை யிரக்ஷிகண்டா யத்தனே நித்தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (5)

மாமாயை யென்னுமா மரமதனி லேகனி மாறுது திர்ந்து விதையாய் மண்முதற் பூதங்க டன்னிலே முளையாகி மட்டிலக் கில்லாததாய், காமாதி முதலான காடுண்டு பண்ணியக் காடதனில் வாழுமுயிர்கள் கரையில்லை நிலையில்லை போக்குவ ராவாகியே ருவிகா ணுதியெல்லாந், தாமா யிருந்துகொண் டென்னைவிட வேறில்லை சம்புவே யில்லையென்னுஞ் சங்கற்ப மானதொரு பேய்களெல் லாங்கூடிச் சத்தசத் தென்றுரைக்கு மாமாகி லுன்னைவர் தடையுவழி யெவ்வழி யடியேற்கு வருள்செய்கண்டா யத்தனே நித்தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (6)

சுத்தவறி வானதோர் நித்யபரி பூரணசு யம்புபிர காசமது வாய் சும்மா யிருக்கவே நின்னதரு ளென்றுதான் செய்குவா யென வறிகிலேன், முத்தரெனு நின்னடியர் தன்னடியி லேயடிமை

முறையாக முத்திமார்க்க முன்னின்று கேளாது பின்னேவல் செய்யாது மூகருடனே கூடியான், பெத்தனென வேசுத்தி யிவ் வுலக மீதிற் பிறப்புற்ற வந்தகன்போல் பேயான லோகத்தில் மாயாதி மோகப்பி றப்புற்ற லைந்தனந்தோ, வத்தமதிலே ஞான முத்திரை பிடித்துன தடியேனை யிரட்சி கண்டா யத்தனே நித் தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (7)

எட்டாத தேனுக்கு முடவனிச் சித்தபடி யெப்படியோ வப் படியெயான் யேகபரி பூரண சிதானந்த வடிவா யிருக்குநின் பெரு மையறிய, வொட்டாது பாசவினை மாமாயை மோகமொடு வொன் றுனூ ருயிரமதா யொன்றைவிட் டாலொன்று கூத்தாடி நிற் குதே யுன்னையே நம்பினேன்யா, னிட்டானு பூதிநிலை நின்றுநின் மலமான நித்தியநி ராலம்பமாய் நீங்காது வொன்ரு யகண்டமாய் நிற்குஞ ளெந்தஞ ணீபுகலுவா, யட்டாங்க முதல்விட்டு சிவஞான போத நிலை யடியேற்கு வருளுகண்டாய் யத்தனே நித்தனே யரு ணையுண்ணாமுலை யம்மைதன் மணவாளனே. (8)

சுக்கில சுரோணித மிரண்டுமொன் ருகவே தோய்ந்துவளர் கருவாகியே தோல்நரம் பென்புதசை வுதிரம் பறந்ததே சோறிடு திருத்தியான, தொக்குடல மானதை நானென்று யெண்ணியே சுத்தவறி வதைமறந்து தொய்தத்தி லென்னையு மாழ்த்திநெடு நாளாக சூரிய னிலாதிருட்டாய், பக்கமிரு புறமுமே யிருவினைகள் காவலாய் பாசத்தி லேமெலிந்த பாவியேன் செய்தபிழை யென்ன தா ஞகிலும் பாதுகாத் தருள்செய்குவாய், ஆக்கரமதாய்வந்து நின் னடியர் கூட்டமோ டன்பாக யிரட்சிகண்டாய் யத்தனே நித்தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (9)

எல்லா மிறந்துவிடு மென்றறிந் தாலுமன மெல்லா மெய் யென்றிருக்கு மென்னென்று சொல்லுவே னஞ்ஞான மூடமே யென்னேடு போராடுதே, பொல்லாத வஞ்சகப் புத்தியொ டகங் காரப் புல்லறிவி னுடன்மேவியே போகாத வன்காடு தன்னிலே மேவிப் புலம்பிச் சுழன்றுதிரியுங், கல்லாத யிம்மனந் தன்னையே யெவ்வழி கடந்துகரை யேறிவருவேன் காரணு னந்தபரி பூரணு

நித்யகரு ணாகரா சிறிதுபுகல்வா, யல்லாது நின்னடியர் தன்னடியி லடியேனை யன்பாக வொப்பிகண்டா யத்தனே நித்தனே யருணை யுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (10)

யேகபர வெளியிலே மோனநடு மதியிலே யெல்லையில் லாத ததிலே யெந்தநிலை பேசினு மந்தநிலை யானதோர் யேகரச வெள்ள மதிலே, தேகமொடு லோகமும் போகமொடு புவனமுந் தெரியாத யின்பமதிலே சேர்ந்துவொன் றாகவே வறிவான பூரணச் செங் கதிர் வெளியாகவே, யோகநெறி தன்னிலை சும்மா யிருக்கவே யொன்றுநிலை யேபுகலுவாய் யுற்றபர மானந்த நித்தியபரி பூரணா ஓம்நமசி வாயகுருவே, ஆகமபு ராணமிதி காசமுதல் வேதமு மாராய்ந்து கண்டறிகிலா யத்தனே நித்தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (11)

தேகமுத லிந்திய பிராணமன மென்கின்ற சிறியோர்க டங்க ளுடனே சேர்ந்துவிளை யாடியே தன்னையறி யாமலே செத்தேன் பிறந்தேனென, போகமொடு புவனமுந் தாய்தந்தை மாதரும் பொருளென் றிருந்தவென்னை போக்குவர வற்றதோர் மெஞ் ஞான பூரணப் போதமதை யடையுவண்ணம், யேகரச பாவனை யுள்ளபடி நன்றா யிருந்தபடி யேயிருக்க என்னையாண் டுன்னடிமை யானவர்கள் தன்னினொ டெளியேனை கூட்டுகண்டாய், ஆகமபு ராணகலை வேதமதின் முடிவான வானந்த பரமகுருவே யத்தனே நித்தனே யருணையுண் ணாமுலை யம்மைதன் மணவாளனே. (12)

வேறு.

அன்னமய முதலாக வானந்த மீறதா யைங்கோச மூன்றுட லதா யைம்பூத மீரைந்து விந்தியங் கரணநான் கசையுமுயி ரிவை கண்முதலாய், என்னைவந் தனுசரித் திவ்வுலக மீதினி லிறப்பொடு பிறப்ப தேபோல் எந்தவழி யிம்மாயம் வந்தவா றென்கொலோவிரவி முன் னிருளதேபோற், சொன்னவித மிம்மாயை வல்லபம தேது நின் சொருபமதில் யான்வேறதோ தொய்தமது மேதுவரு துக்க சுக மேதுமுன் செய்ததீ வினைகளேதோ, பொன்னசல மானவா யென்னைவந் தாண்டவா பூர்ண கருணாகரா பூவுலகி லெவ்வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணாசலா. (13)

நானென்று மிற்றைநா ளுன்னைநினை யாமலே நானாவிதங்க டோறு நானா னெனக்குளறி நானா விகாரியாய் நானென்ப தற்றி டாமல், வானேகு மதியிரவி யிராப்பகல தாகவே வந்தவித மெவ் விதமென வரலாறு மறியாமல் விதிமோச மாகையால் வந்தவழி கண்டறிகிலே, னானேது வுயிரேது வுட்புறம் பாவதே துள்ள படி யேயருளுவா யுன்னைவிட வேறுகதி யில்லையா லென்னையாண் டுன்னடியர் தங்களுடனே, பூனேரு வாசமென வைத்தென்னை யாள்வையோ பூரணா னந்தமயமாய்ப் பூவுலகி லெவ்வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணாசலா. (14)

எந்தவித மாகவோ யிவ்வுலக மெய்போ லெதிர்ந்து முன்னே தோன்றுதே யின்னபடி யென்றுதா னித்தை யறியாம லிறந்தேன் பிறந்தேனெனும், பந்தமது வந்தவா றெந்தவித மென்றுநீ பகுத் தறிவி னாலறியிலோ பாழான பேதைமன மேயொழிய வேறில்லை பத்திபாய்ந் தோடுதந்தோ, வந்தமன மேநினைத் தைந்துவித மாவ தென வருமறையு முறையறையுதே யானாலு மித்தைநா னனியாய மாகவே யறியா திருந்தேனினிப், புந்திதிற மாகநின் னருள்நின்று செய்குவாய் பூரணா னந்தமயமாய்ப் பூவுலகி லெவ்வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணாசலா. (15)

கானனீர் தறிபுருடன் வானிலிரு மதியெனக் கந்தர்ப்ப நகர மென்னக் கண்டதொரு விவ்வுலகை யுண்டென்றுவிற்றை நாட் கருதிநிச மென்றிருந்தேன், நானாரா மிந்தவுடற் றானாரா மிற்றை னாள் நானென் றுரைத்ததாராம் நானா விதங்கடோறுந் தாய்தந்தை மாதரென நண்ணிவரு சுற்றமேது, வானாகி வளியாகி வன்னிபுனல் மண்ணாகி மதியிரவி யெச்சனாகி வந்துயிர்க ளிடமாகி நானாகி நீயாகி வாழுலக மெங்குநிறைவாய், பூனேரு வாசமென வேதே னில் ரசமெனப் பூரணா னந்தமயமாய்ப் பூவுலகி லெவ்வுயிர்க் குயி ராகி யென்னுட் புகுந்தவா சோணாசலா. (16)

தந்தையிரு பாதமதி ரண்டுதுண் டாகவே தடிந்துநின் பத்தி யதிலே தானென்ற பாலர்க்கு வானென்ற மதிகூடி தானென வெழுந்தருளியே, வந்துநின தடியரொடு முந்தமறை முடியோதி

வானவர்கள் தானறிகிலா வாராத வழியதனை மேலான மோனமே
வைத்தவர்க் கருள்புரிந்தா, யந்தவித மாகநின் பத்திதனி லேநிற்க
வறியாத நாயினேனை யாகாத பிள்ளையைத் தாய்தள்ள நீதமோ
யார்க்காக வடிமைகொண்டாய், புந்திதிற மாகநின் னருள்நின்று
செய்குவாய் பூரணா னந்தமயமாய்ப் பூவுலகி லெவ்வுயிர்க் குயிராகி
யென்னுட் புகுந்தவா சோணாசலா. (17)

பத்திநெறி யதனிலே நின்றுநின் னாகமப் படியர்ச் சனைபுரிந்து
பாவித்து மொன்றைநீ யென்றுமே யாடிப் பணிந்தெழுந் திருகை
கூப்பி, சுத்திவல மாய்வந்து அந்தநிலை யாகவே தோத்திரஞ் செய்ய
வறியேன் சொருபநிலை யானதோர் நின்னடியர் தங்கள்பாற்
றொண்டுபட் டொன்றானதோர், முத்திவழி யாதொன்று மவர்
திருப் பணிசெய்து முன்னின்று கேட்டுமறியேன் மூகருடனேகூடி
யிற்றைநாண் வீணாக மோசமது வானேனினிப், புத்தியது திறமாக
நித்திய சொரூபமே புகலெனக் கருள்புரிகுவாய் பூவுலகி லெவ்
வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணாசலா. (18)

ஆதவனு மம்புலியு மங்கிதிரி கோணமா யந்தநடு வட்டமதிலே
யம்பர விலாசமா யின்பசுக யோகமா யடிநடுவு முடிவானதன்,
றோதுமறை யோலமிட் டொன்றாகி நின்றதென் றன்னைவிட
வேறில்லையா லொளியெனவு வெளியெனவு முருவெனவு மரு
வெனவு மொன்றுபல வாகவிரிவாய், பேதமிகு மாகையா லெந்த
வித நின்பூசை பேணுவழி கண்டறிகிலேன் பேரின்ப மாகவே
சுகமான நிட்டையிற் பேசாத மோனஞானம், பூதமுதல் நாதவரை
பொய்யென்று தள்ளியே பூரணம தாகவருள்வாய் பூவுலகி லெவ்
வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணாசலா. (19)

கண்ணினொளி யதனினின் றன்னுருவ மறிவித்து காதினி
டமே மேவியுங் காவியங் கீதங்கள் ராகங்க ளாகவே கனசத் தமே
யுணர்த்தி, மண்ணில்விளை யிரசவகை தனைநாவி லறிவித்து மலர்
கெந்த வாடை முதலாய் மாருதத் தொடுநின்று நாசிதனி லறி
வித்து மருவலுறு கொதுகீ யீடல், நண்ணினது வறிவித்து யெங்கு
நீ யாகவே நானாவி தங்க டோறும் நானென்று நீயென்று கொண்ட

தெத் தனையிதனி லுனென்ப தேது புகல்வாய், புண்ணியற் கரு ளுதவி யெண்ணுதற் கரிதாகி பூரணானந்த மயமாய்ப் பூவுலகி லெவ் வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணு சலா. (20)

ஐயனே யப்பனே யென்றுனை வோடிவரு மைம்புல னடக்கி நின்னை யருளான மலர்கொண்டு வொருகால மிருகால மல்லாது வெக்கா லமுஞ், செய்யவே பூசையிது செப்புவது மெந்தநாட் சிறியனேன் கரை யேறவே தேவர்க்கு மறியாத தேவனே நின் பெருமை செப்புவது வெப்ப டியுநீ, மெய்யனே யென்றுனைக் கேட்டதே யல்லாது யென்பா டுறைக்க வறியேன் மேலான தெய் வமே யானந்த ரூபனே மேன்மையறி யாத நாயேன், பொய்யனே னுகிலுங் கைவிட வொணுது நீ பூரணு னந்த மயமாய்ப் பூவுலகி லெவ்வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணு சலா. (21)

அந்தமொடு வாதியுடை பிண்டாண்ட லோகமு மஞ்ஞான ஞான மெனவு மறிவுமறி யாமையுஞ் சகலகலை வேதமு மமரர்நரர் பல சீவரும், வந்தவா றெங்ஙனந் தாய்தந்தை யேதுமுன் வல்வி னைய தென்ப தேது வந்துட லெடுத்துமே நரகசொர்க் கங்க டனின் மருவலொடு போக மேது, இந்தவித மாகவே யிற்றை நாணு னென் றிருந்ததே துன்னை யல்லால் யெங்குமாய் நின்றநீ கைவிடுத னீதமோ வெளியனேற் கருளுதகண்டாய், புந்திமுத னீயென் றுரைத்துவிட் டேனின்று பூரணானந்த மயமாய்ப் பூவுலகி லெவ்வுயிர்க் குயிராகி யென்னுட் புகுந்தவா சோணு சலா. (22)

வேறு.

கண்டதெது நின்னைவிட வண்டகோ டிகளெலாங் கடுகுவனு வென வாகியே கதிரினது கிரணவொளி யதனிடம தாகவே கான னீர் காட்டி னதுபோல், அண்டமொடு புவனமும் பிரமாண்ட லோகமு மஞ்ஞான ஞான மெனவு மாதார பீடமும் பூசா செபங் களு மார்க்கா யமைந்த திது தான், கொண்டலது வானதனி னின்றலையு மாறதென கோலமது வார்ச மைத்தார் கூறரிய வேத முடி வானநட ராஜனே கூத்தாட்ட னின்பெருமை காண், மண் டலமு மூன்றதனின் நின்றுவிளை யாடியே மனவாக் கிறந்து நின்ற

மாசிலா மணியனே சோணு சலத்தனே மௌனவுப தேச குருவே. (23)

இருள்கன்ம மாயைமா மாயைதிரோ தாயியென் றிவ்வைந்து மொன்றி லொன்று யேற்றமது வாகவே தோற்றற வெலாமாகி யெவ்விடத் தினுயா னெனும், பொருளாக நின்றதே யல்லாது யெங்குநிறை பூரணம தென்ப தெவிடம் யோக்குவர வற்றதென் றெக்கலையு மோதவே பொய்யென்று சொல்ல வொண்ணு, வருள் ஞான செங்கதிரின் முன்னுக யிருளொன்று வணுகுமோ வம்பரத்தி லாரணிய மென்பவர்கள் போலவரு மஞ்ஞான மான வதிலே யழுந்தி, மருளான வுலகரொடு நின்றுதவி யாமல்வரம் வந்தெனக் கருள்பு ரிகுவாய் மாசிலா மணியனே சோணு சலத்தனே மௌன வுப தேச குருவே. (24)

உடலெனக் கேதுவுயி ரேதுவென வேவுணர்வி னுற்றுவறி யாமலுலக முண்டான தேதுவென் றெண்ணிடா நின்றவென் னுண்மையினை யென்ன சொல்வேன், படபடென வேமனஞ் சென்று விட யத்திலே பாய்வதுவு மேல்கீழதாய்ப் பற்றியே வானரம் போலநின் ருடினுற் பண்டைவினை யோவறிகிலேன், றிடமுட னிழுக்குதே வாங்கார மானசெந்தீயதற்கென் செய்குவேன் செப்பினே னபயமென மெய்ப்பரம னேயுனது திருவடியை நம்புகின்றேன், மடல்விரியு மறைமலரி னுறைபவனு மரியுமே வழிபட்டு நின்று போற்றும் மாசிலாமணியனே சோணுசலத்தனே மௌனவுப தேச குருவே. (25)

ஓயாம லலைவந்து வாரியினி லேயலையு முன்மைபோ லிவ்வுலகமோ வொன்றுநூ றாயிரங் கோடி சதகோடியா யொருநிமைக் குள்ளா குதே, பேயான மனதினிற் சென்றுவெழு நினைவதே பிரபஞ்ச வடிவ மலது பெற்றதாய் தந்தையொடு சுற்றமாய் நின்றதும் பிரமையென் றறிய வருமே, ஞயாகி நின்றசில நரியாகிநின்ற சில நாநாவி தங்களுடல நானென் றெடுத்தபோ தத்தனையு மெய் யென்று நம்பினது மிம்மனமதே, மாயாத படியினு னின்னருளை நம்பாமல் மாண்டேன் பிறந்தேனந்தோ மாசிலா மணியனே சோணுசலத்தனே மௌனவுப தேசகுருவே. (26)

கையதனி னெல்லியங் கனியென்வு நின்னன்பர் காட்டு வே தாகமத்தின் கதையினற் பொருளெலா மொன்றலதி ரண்டிலை கண்டதுவு மெய்யதென்று, அய்யவிப் படியோத வேசமய மானகா டதனினிடை யேகுவதெலா மனியாய மாகவே பேதவிவ காரமெனு மந்தகா ரத்தின்வடிவாய், பொய்யென விருக்கின்ற முத்திபே தங்கள்பல பொருளென் றெடுத்து மொழிவர் பூரணானந் தபர மானநின் பெருமையைப் புகலுதற் கெளிதாகுமோ, மையல்கொடு நின்னருளை மெய்யென்று நம்பிலேன் மறைமுடிவி னடனமிடுவோய் மாசிலா மணியனே சோணாசலத்தனே மௌனவுபதேசகுருவே. (27)

கங்கைமதி யாடரவு செங்கைமழு மான்வடிவு கங்கணமுன் னூற்புரானுமார் கண்டமதி லுண்டவிட மென்றுனது தன்பெருமை கண்டவர்கள் போலவுலகி, லெங்களர னென்பவர்க ளின்னவடி வென்பவர்க லெந்தையுனை யேற்றுவர்களா லெங்குநிறை கின்ற பொருளென்றுமற்றை யொன்றுபட வொன்றுனது தன்செயலதாம், பங்கய மமர்ந்தவ னுரைத்தபடி யேயொழிய பாருலகில் வேறுமொழிசொற் பாவனை யெலாஞ்சமையபேதமது வாகையாற் பார்ப்பதினி யேதுபுகல்வாய், மங்கையுமை பங்கினருள் பொங்கியெனை யாண்டநின் மகிமையது சொல்லவெளிதோ மாசிலா மணியனே சோணாசலத்தனே மௌனவுபதேசகுருவே. (28)

சத்தமுத லைந்தையு மடக்கியொரு வழியினிற் றானின்றுவுணர்வின் வடிவாய்த் தானாக வேநிற்கு மப்போது வருகின்ற சங்கற்பம் யாதுமின்றிச், சித்தமசை வறநிற்கு நிலையொன்று தானுமே செப்புவது நாட்செல்லுமோ சிறியனென் றுன்னடியர் கூடாதுவென்றதுன் றிருவுள மிரங்காததோ, யுத்தமனமாகினுல் விடியாதுயென்றுநின் னூரண முரைத்ததுண்டோ வானுலு நின்னையே நம்பினே னல்லாது வாதரவு வேறெனக்கார், மத்தமதி கூவிள முடித்தசடை யாடரவு மார்பினி லணிந்தவடிவே மாசிலா மணியனே சோணாசலத்தனே மௌனவுபதேசகுருவே. (29)

வந்துயெதிர் நின்றதொரு பகைஞருயிர் வாங்கிடு மன்னன் கைவேலதேபோல் வந்துருக் காட்டிமை விழிகொண்டு மாந்த

ருயிர் வாங்கவே தோன்றிநின்ற, பந்துமூலை மாதரொரு கூத்த னென்றேபெரியர் பண்டே யுரைத்திருக்க பழவினையி னுலதனை நிலைமையென் றெண்ணியப் பாழா மளர்க்கிணற்றி, விழிந்திடுவ ரெந்தவித மக்கிணறு தனைவிட்டுவெளியேறி யின்பமடைவர் ஏகாந்தமாகவே நின்னருட் பார்வையா லெப்போது மேயிருக்க, மந்தமுறு புந்தியினை நின்னருளி னுல்வென்று வந்தவர்க் கெளிதாகுமே மாசிலா மணியனே சோணுசலத்தனே மௌனவுபதேசகுருவே.()

அன்னமது சுக்கிலம தாகியது முற்றியுட லானவகை நானதென்னு மறியாமை யோவெகு பேதவுரு வாகியே யற்றேனலைந்தேனெனப், பின்னமவர் வந்ததென் முன்னவினை யோவது பிராரத்வ மென்பதிதுவேநு பேயுலக வாழ்க்கையை நிலையென்று நின்றவென் பேதமைக் கிடமேதுகாண், முன்னவனு நீயாகி மன்னுயிரு நீயாகி மூவர்திரி லோகமென்னு முச்சுடரு தித்தகிர ணத்தொளியு நீயாகி மூலநடு வாயிருந்த, மன்னவனெனப் பெயர்தரித்த வுனதருமையான் மற்றவழி கண்டறிகிலேன் மாசிலாமணியனே சோணு சலத்தனே மௌனவுப தேசகுருவே. (31)

அன்று கல்லாலமர்ந் தேநால்வர் தங்களுக் கறமாதி பொருளுரைத்த தல்லர்து தந்தைதா ளிரண்டுந் தடிந்தவர்க் கருள்செய்ததென்னை முன்னஞ், சென்றுவுல கத்தினிற் சமயங்கள் நிலைநிற்க செய்வித்த திருவாதவூர் செல்வர்க்கு மேல்மூவர் தங்கட்குமேவந்து செப்பினது மெய்ப்பொருளைநீ, கன்றுக் கிரங்கிவரு தாயெனவு நின்னன்பர் காணவெளி தாகவந்த காரணு நின்னையே நம்பினேன் யென்னைநீ கைவிட்டிடாது கண்டாய், மன்றுதனிலே நடித்தென்றைக் குமன்பர்பால் வாசமென வேயிருக்கும் மாசிலா மணியனே சோணு சலத்தனே மௌனவுப தேசகுருவே. (32)

வே று.

தந்தைதாய் மனைவி மைந்தரோடுகிளை தம்பியென் றமையனென்பதாய் சாதிபேதமொடு வாழ்வதானவிது தானுமே நிலைமையென்றுதான், பெந்தரூபமென நின்றவாறிது \பிறந்திறந்து மனியாயமாய்ப் பேய்பிடித்த சிறியோர்கள் போலுலக பேதமான பெரு

மாயையில், வந்தெடுத்தவுட லெண்ணிலாதது மனத்தினாலென விதித்ததோ வார்கட்டற்றிரைகள் போலுதித்தமன மாயையிற் சுழலு கின்றவென், சிந்தையைத்தெளிய வைத்து நின்கருணை செய்வை யோ வருணை வாழுவோய் தேவருக்கு மறியாத மெய்ப்பரம தேவ னே கைலைவாசனே. (33)

அப்பனேயெனது வன்னையேயுனது வருளினைப் பெறுவ தென்றுநா னற்றபோதமது பெற்று ஞானநிலை யடைவதற்கு மொரு மொழியினை, செப்பவேண்டு மினிதாகவந்துதிருவாய்மலர் ந்து சிவஞானமே தேவருக்குமரி நான்முகற்குமறி யாததெய்வமு நீயாதலா, லொப்பிலாதவருண் மேனிகொண்டுவட பாலமர்ந்து முன நால்வருக் குண்மைஞானனெறி சொன்னவாறு மினியோதி நின்னடிய ரடியிலே, வைப்பதென்றுமென தப்பனேயருணை வாழு வோய் கருணைவாரிநீ வானவர்க்கரிய தானமுற்ற பரமேசனே கைலைவாசனே. (34)

வானமீதின்முகிற் கூடியோடிவெளி யானவாறுமன மாயை யால் வந்தெடுத்துவுடற் பெத்தமுற்றுமனை யாதியோடுநெடு நாளை தாய், நானதென்றுவுடன் மாறிமாறிவரு நன்மை தீமையொடு கூடவே நானிருந்தபடி யென்ன வென்னவிது நாதனே யுனையி றைஞ்சிடா, தானபாவியென நீ மறந்துவிட லாகுமோவமலமானநீ யாதியந்தநடு வாயிருந்து மருண்மேனி கொண்ட குருநாதனே, தேனிலின்பமென வந்து நின்கருணை செய்திடா யருணைவாழு வோய் தேவருக்குமறியாதமெய்ப்பரம தேவனே கயிலைவாசனே.()

ஆசைபாசமதி லேயுழன்றுமலை வாகியைந்துபுல னூடுபோ யலையுகின்றமன மதனையெவ்வழியி னடக்கியருட் கூடுவேன், நாசமானவுட லாதியானபொரு ளனதென்று நெடு நாளதாய் நானிருந்தபடி யாதுயித்தையினி நானறிந்திடுவ தியாதினால், தேச மானவனு பூதியெங்குளது நின்றறிந்திடுவ தெங்ஙன நிற்குநேர் மையெது சித்தமொன்றுபட நீயெனக்குவருட் சோதிநீ, தேசகால மொடு நாமரூபநடு வாயிருந்தரு ணைவாழுவோய் தேவருக்குமறி யாதமெய்ப்பரம தேவனே கைலைவாசனே. (36)

அந்தகாரமய மாயிருக்கு மறியாமையென்று மொருமாயை யென் னறிவினூடலையு மதனைநின்னருட் டானபானுவொளியுதய மாய், வந்தபோதகலு மென்றுமாமறை வழுத்தநின்னடி யிறைஞ் சிடா வானமுட்டிவரு மாசையிற்றின மருண்டுவிவ்வுலக வாழ்க்கை யைப், பந்தமென்று மதியாம லெந்தைமனை பெற்றதாய் மனைவி புத்திரர் பேருவுருவுற வாகிநீடுபெரி தாயிருக்க நினைவானவென், சிந்தையைத் தெளியவைத்து நின்கருணை செய்திடா யருணைவாழு வோய் தேவருக்குமறியாத மெய்ப்பரமதேவனே கைலைவாசனே. ()

பந்துபோன்முலை யிருண்டகூந்தல்கொடு பரந்தமைவிழி மிரட்டினுற் பாசமானவலை வீசிவந்துறவு பண்ணு பாவையர்கள் தன்முனே, சிக்கியே சிதறி நின்ற பேய் மனது சேர்ந்து மோகவலை கூடியே சிறியர் போன்மருளு மறிவிலாமையது செய்யுமே யதனை யென் செய்வேன், தந்தை தாய் குருவு மாகி யென்னுடைய தம் பிரானெனை வெழுந்த மெய் சம்புசங்கர சதாசிவப்பரம தத்துவப் பொருளு மானநீ, வந்து நின்கருணை செய்திடாயருணை வாழுவோ யமலசோதியே வானவர்க்கரிய தானமுற்ற பரமேசனே கைலை வாசனே. (38)

இல்லமாதியை விடுத்துவந்துதுற வெய்தியென் பயனறிந் தது யெவ்விடத்தினு மலைந்து வையமிடு வார்களோ டுறவுகொண்டு நின், நல்லல்மேவி யலைகின்றதன்றி யுனதன்பர் தன்னடிய ரடி யிலே யண்டியன்பினெடு நின்று கண்டுருகி யாதரித்துமடி பேணி லேன், கல்லதாய் மனது கற்றுமேகரைவி லாமலேகசட ஞகிநின் கருணைவாரியினை யடையவோர் நினவு கண்டிலேன் கமல பாதமே, செல்லவோர் நினைவு தந்து நின்கருணை செய்திடாயருணை வாழு வோய் தேவருக்குமறி யாதமெய்ப்பரம தேவனே கைலை வாசனே.

கற்றுணர்ந்துவுல கத்திலோடுகார ணத்தையேநிலை நிறுத்தி நின் கருணைபொங்கியலை யசைவிலாதகடற் கண்டு வக்கடலில் மூழ்கியே, பற்றிலாதபடி சுத்தனுயுனது பத்தியே நிலைமை யுற்று நான் பண்ணுபூசை யெது வெண்ணிலாதபடி பகருவாயமல ருபநீ, முத்தரானசன காதியர்க்கருளு மூலகாரணமு மானநீ முடிவிலாத படி யயனுமாலுமடி முடியுமே யறிய வறியதாய், சித்துருபமென

நின்ற நின்கருணை செய்திடாயருணை வாழுவோய் தேவருக்கு மறி யாத மெய்ப்பரம தேவனேகைலை வாசனே. (40)

ஆதியந்தநடு வாகியெங்குநிறை வானநின்னையறி வானதென் னுகமங்கள் மறை யோதுகின்றபடி யாகநின்னருளினாலெயே, யோ தியங் குணர்வி னூடெழுந்துவழி யோமெனும் பொருளை மேவியே யொளியினோடொளியும் வெளியினோடு வெளி யோதுமே யறிவ தானபின், சோதியேமயம தாகநின்னடியர் சுத்தமாயறிவை யுற்ற னர் சொன்ன நூற்கள்பல வுண்டுயென்னையினி சுத்தனாகவருண் முத்தியே, தீதிலாதபடி தந்துநின்கருணை செய்திடாயருணை வாழு வோய் தேவ்ருக்குமறி யாதமெய்ப்பரம தேவனே கைலை வாசனே.

ஆடினார்கள் சில ரன்புகொண்டுருகி யலறினார்கள் சில ரழுகை யோ டங்கைகொண்டுமல ரெங்குநீ யென வறிந்துபூசனை புரிந் துனைப், பாடினார்கள் சில ரெக்கியங்கள் சிலர் பண்ணினார்களுனை நண்ணவே பாவியேனுனை நினைந்திடாதபடி பண்ணுகின்ற வினை யென்னவோ, வோடினாயென வழன்று யிவ்வுலக முண்மையென்று பொருள் தேடிமா னுற்றமாதர்வலை யுற்று நோய்கள்கொடு வூன் சுமந்து மலைவேனை்நீ, தேடிவந்துனருள் செய்திடா யெனது தெய்வமே யருணை வாழுவோய் தேவருக்குமறி யாதமெய்ப்பர[illegible] தேவனே கைலை வாசனே. (42)

வேறு.

கண்டதை விரும்பிக்கொண்டுநின் றுழலுங் கசடனென் றெனை விடுத் துனது, தொண்டர்க ளிடநின் றகமகிழ் வதனாற் சோதியே மறந்திருந் தனையோ, பண்டையி லெனைவந் தாண்டநீ யலது பற்றுத லென்க்குவே றுளதோ, வண்டரு மறியா நின்றபே ரொளி யே யரகரா வருணைநா யகனே. (43)

கண்ணினுண் மணியாய் மணியினி லொளியாய் கதிர்மதி யொளிக்கெலா மொளியாய், விண்ணினில் வெளியாய் விளங்கு மெய்ப் பொருளாய் விண்ணவர் நண்ணுதற் கரிதாய், ஒண்ணினிற் பலவா யுலகுயிர்ப் பூரமா யோங்கியே யெங்கணு நிறைந்த, வண்ண விப் படினின் னருளிருந் தமையென் னரகரா வருணைநா யகனே.

ஒருபொரு ளதுதன் நினைவினின் மூன்று வுலகுயிர்ப் பரமென விளங்குந், திருவரு ளதுவே யெனவுமுன் னிலையாய்த் திகழ்தரு மொருபரப் பிரமங், குருவென வறிவா யெனவுமுன் னுரைத்த கோலமே நின்றிருக் கோல, மருமறை முடிவி னடமிடும் பொருளே யரகரா வருணைநா யகனே. (44)

நனவொடு கனவு சுழுத்திமூன் றதனினு னெனும் பாவனை பொருந்தித், தனதென விருந்த வவத்தைமூன் றுடலுந் தன்னையே தானறி யாதாற் கனவெனக் கழன்று நின்னையே நோக்கிக் காணெனக் கருணைசெய் தனைநீ, அனலெனத் திகழ்ந்தென் மறதியைத் தடிந்த வரகரா வருணைநா யகனே. (45)

புத்தியின் விகற்ப மறவறி வுணர்த்திப் பூரண பாவனைப் பொருந்தி, நித்திய விமலஞ் சாந்தமென் பதுவாய் நின்றநின் பெருமையை யறிய, பத்திதந் தருள்வாய் நின்னை வேறாகப் பண்ணிய தவத்தவர் விடுத்த, வத்தியன் றுரித்துப் போர்த்திய பரனே வரகரா வருணைநா யகனே. (46)

பொய்யுட லினைநானெனுஞ் செருக்குடையப் பொய்யகங் காரமே பொருந்தி, வையக முழுது நிலையென வுழலு மனத்தின் வல் லபமது மாய்த்து, வெய்யகா மத்தின் வேர்பறித் தெறிந்து விண்ணகங் கண்ணென விளங்க, வையநின் கருணை யிருந்தவா றென்னே வரகரா வருணைநா யகனே. (47)

பொன்னையே மணியென் றனந்தமா யெடுத்துப் புகலுவர் பொன்னெனக் காணார், தன்னையே வறியா ரதுவிது வெனவே தானெடுத் தியம்புவ ரவத்தா, லுன்னையே பொருளென் றுணர்ந்த மெய் யடியா ருலகுயிர்ப் பரமென விளங்கு, மன்னையே நின்னை யன்றிவே றறியா வரகரா வருணைநா யகனே. (48)

வேறு.

கருணையுருக் குருவடிவாய்க் கட்புலத்தி னிடைதோன்றிக் கதிபெற் றுய்ய, வருணகிரி தனிலுறையு மண்ணறிரு வடிமுடியா யமைத்து மன்பாய், தருணமிது வெனவருளிச் சச்சிதா னந்தவின் பந் தானேதானாய், மரணபவ மயக்கறுத்து மாமவுனத் திருத்தி வைத்த மகிமை யென்னே. (49)

அறிவினு லறியப் படும்பொரு ளனைத்து மறிவைவிட் டன்னிய மிலதாற், பிறிவிலா தெங்கும் நிரந்தரஞ் சமமாய்ப் பின்னமற் றொளிதிகழ் கின்ற, நெறியதாய் நிலையாய் நிரைந்தபூ ரணமாய் நித்தியானந்தநின் மலமாய்ச், செறிவதாய்ச் சிவமாய்ச் சிவசிதம் பரமாய்த் தெய்வமாய் நின்றசிற் சுடரே. (50)

ஈசனே குருவே எந்தையே சிந்தை யிருக்குமெம் முயிர்த்துணை யிறையே, மாசிலாமணியே மன்றுணின் றாடுமகத்துவ முடைய சீர்மன்னே, நேசனே யெங்கு நிறைந்தபூ ரணனே நித்தியா னந்த நின்மலனே, பாசமோ சகனே தேசிக வடிவாய்ப் பகிர்ந்திடும் பரம யோகியனே. (51)

பூதமும் பொறியும் புலன்களிற் பழகும் புத்தியும் சித்தமா திகளாற், பேதமும் பலவாய்த் தோற்றிநீ யொடுக்கும் பெருமையா ரறிகுவார் பெரியோய், போதமே வடிவாய் நிறைந்தபூ ரணனே போக்கொடு வரவிலாப் பொருளே, நாதனே குருவே நம்புவார் சிந்தை நடித்திடு மருணா யகனே. (52)

வே று.

நம்பினேன் நமச்சி வாய வென்றொரு நாமந் தன்னை
உம்பர்கோ னயனு மாலு மொருவருந் தேடிக் காணு
தம்பிரா னென்னை யாண்ட சச்சிதா னந்தன் றன்னை
யெம்பிரா னீசா வென்றே யேற்றுவேன் போற்று வேனே. (53)

போற்றுவே னுலகம் யாவும் புறம்புமுள் ளாகி நின்று
தோற்றிய சுடரே யென்றுஞ் சோதியுட் சோதி யென்றுஞ்
சாற்றுநான் மறையி னந்தஞ் சத்திய ஞான நந்தா
காற்றுநீ யடிமை கொண்டாய் கண்ணதாய்க் கண்ட வாறே. (54)

கண்டது காட்சி நீயே கண்ணதா யெங்குந் துன்றி
கொண்டது கோல மாக கொண்டுநீ நடித்த கூத்தை
அண்டரு மறியா நின்ற வருணையம் பதியு ளானே
தொண்டருக் கெளிய சோதி சொன்முடி வாகி நின்ற. (55)

நின்றிடு நிலமை யாவு நீக்கமற் றிருக்கு நின்னை
யொன்றெனப் பலவா யுன்னி யுணர்வொணு வொருவர் வென்று

மன்றிலே நடித்தா யுன்றன் மகத்துவ மறியொ ணாதார்
குன்றென நின்ற யின்பங் குருபத மாகத் தானே. (56)

தானவ னாகி நின்ற சச்சிதா நந்தா நின்னை
கோனென வறிந்து கொண்டேன் குருபதத் தன்பி னாலே
வானென நிறைந்தா னந்த வடிவினை வாழ்த்தி யேத்தி
மோனமா யிருக்க வைத்தாய் முத்திதான் சித்தி யாயே. (57)

சத்தியாய்ச் சிவமா யெங்குந் தெய்வமாய்த் திகழு கின்ற
நித்தியா னத்தன் றன்னை நினைப்பற நினைந்தா லந்தப்
பத்தியே முத்தி யென்று பகருநான் மறையி னந்த
முத்தியா லனுப வத்தா லுணர் வுபெரு ணர்வாங் கண்ணே. (58)

கண்ணென வின்பா தீதக் கடலெனக் கதியாய் ஞான
விண்ணெனத் திகழுகின்ற விமலனே வேத நன்னூற்
பண்ணென விசையாய்ப் பாடற்பயன் களாய்ப் பகுத்து நிற்கு
மண்ணலா ரருணை வாழு மப்பனென் றிரைஞ்சு வோமே. (59)

ஆதியு மந்த மின்றி யகண்டபூ ரணமாய் நின்ற
சோதியே யருணை வாழுஞ் சுடரொளி யென்று போற்றி
கோதிலா வமுதே யென்றுங் குருமணி யென்று நாளு
மோதுவே னுணர்வே நின்னை யொளிதிகழ் பரம தாயே. (60)

உன்னுதற் குணர்வை யன்றி யொருபொருள் வேறாய்த் தோன்றா
தென்னிது நானென் றெண்ணி யிருந்திடு மெண்ண மெங்கே
தன்னிலே தானாய் நின்ற சச்சிதா னந்தா நின்னை,
யன்னிய மிலாது பெற்றே னரகரா வருணை வாழ்வே. (61)

கற்றது கேட்ட தெல்லாங் கடவுளர் செயலே யன்றி
யெற்றை நாமறியப் போவோ மென்பதா யகன்று மோனம்
பெற்றதே பிறவா ஞானம் பேசிடாய் பிறவா தன்னைச்
சிற்றதாய்ச் சிவமாய்க்கண்டு தெரிசித் தோர் தெளிவுற் றாரே. ()

யற்றுவ தெல்லாம் பொய்பொய் பரமனே நிறைவா யெங்குஞ்
சிற்றுரு வாகத் தானே திகழுவோன் சிவனே யென்றுங்
குற்றமுங் குறையு மில்லான் குறிகுண மில்லா நின்ற
சுத்தனே சொருபா னந்தா யென்றுகை தொழுதுய் வாமே. (63)

வேறு.

சுருதிகுருவா லறிவுணர்தல் சுவானு பவமூன் றென் றாகக்
கருதியிருந் தகாரணத்தைக் கண்ணாய்க் கண்ட காட்சியினைப்
பருதிமதியு மனலொளிக்கு மொளியாய்நின்ற பரசிவனை
யிருதயத்தி லிரவுபகலில் லாவிடத்திற் கண்டேனே. (64)

கண்டேன் கருணைக் கடன்மூழ்கிக் கதியாய் நின்ற காரணத்தைப்
பண்டே யிலகும் பரசிவனைப் பாடிப் பணிந்து பலகாலுந்
தொண்டே யடியார்க் கடிமைபுகுஞ் சுகமே யதனைச் சொல்லரிதாம்
விண்டே மறைக ளாகமங்க ளெல்லாம் விளம்பு மிதுதானே. (65)

தானே யனைத்தும் வேறிலாதாய்த் தானாய் நின்ற தன்மயனைக்
கோனே குருவே யெமதறிவே குறியே நெறியே கோலமெலா
நானே நீயாய் நீநானாய் நாடுவிதமாய் நடித்தனைநீ
யானா வறிவே யடியவர்பா லிலகு மகண்ட பரசிவமே. (66)

சிவமே யடியார் சிந்தனையுட் டிகழு கின்ற சின்மயனே
பவமே யன்றி யெப்போது மொன்றாய் நின்ற பாக்கியமே
தவமே முடிந்த தலமாகுந் தானாய் நின்ற தன்மயனே
அவமே மறந்த வருவினைநோ யகற்று மருணை யம்மானே. (67)

வேறு.

சித்தமே யொன்று கேணீ சிவசிதம் பரமாய் நின்ற
நித்தனை நிமல வாழ்வை நிறைந்தபூ ரணனை நீங்காச்
சுத்தனை பொருந்தி ஞானச் சுயஞ்சுட ரான சோதி
யத்தனை யருணை வாழு மப்பனென் றறிந்து கொள்ளே. (68)

காடுநாடோடி வீணே கலங்குதி கவலை நெஞ்சே
பாடுபா டதனை நீங்காப் பரம்பொருட்டிகழு கின்ற
வீடுவீ டதனை நாளும் விமலமா மறிவின் கண்ணே
கூடுகூ டுண்மை சொன்னேன் குருபதத் தன்புதானே. (69)

பத்தியாற் பரம ஞானம் பரம சற்குருவி னாலே
சித்தியாஞ் சிவமே யென்றுந் தெய்வமே யென்று மன்பு

நித்தியா னந்தா வென்று னிறைந்தபூ ரணனே யென்றுஞ்
சத்திய ஞான நந்தா தன்மயா வென்று போற்றே. (70)

போற்றுவார் புகழ்வா ரன்பு பூரண மானதாலே
சாற்றுவாரனந்த நாமந் தன்மயனாத னாலே
வேற்றிலா திலகு கின்றவிமலமா மறிவின் கண்ணே
தோற்றமா யகண்ட வன்பாற்றுணையடி முடியாய்க் கொள்வாம். ()

கற்றதுங் கேட்ட தெல்லாங் கடவுளர் செயலே யென்று
நித்தமு நினையு மன்பானிறைந்தபூ ரணமாய் நீங்காப்
பெற்றதும் பிறவா ஞானம் பெற்றபே ரறிவை யுள்ளோர்
நித்தமும் நினைவார் நீங்கார் நித்தியா னந்தந் தானே. (72)

சாதன மனந்தஞ் சொல்லூந் தன்னிலை யறியத் தானும்
போதனை யனந்தஞ் சொன்ன புத்தியும் பொருட்கா ணர்க்கு
வேதன மாகுமிந்த வீதமெலாம் விமலஞான
வாதனை யென்று கண்டார் வாக்கொடு மனவிட்டாரே. (73)

வேறு.

இச்சையால் வெகு வெண்ண முற்றனை யெண்ண முற்று நீ என்னை பெற்றனை, யச்சமேவிய யல்லலுற்றனை யல்லலுற்றதா யறிவுகெட்டனை, நிச்சயங் குருபாதம் நண்ணினல் நிமலஞானமே பெறுவ ருண்மையாய், யுச்சிதம் மருளுண்மை மேவினு லுள்ளதே பொருளுணர்வு தோன்றுமால். (74)

கவித்துறை.

மந்திரப் பித்தா மலமாயை கன்மத்தில் மக்கினமா
யெந்திரப் பித்த ரிதுவது தெய்வமென் றேத்திநிற்குந்
தந்திரப் பித்தாச் சமயப் பித்தாகுஞ் சகமயக்காற்
சுந்தர ஞானச் சுடறனைப் போற்றவுஞ் சொல்லரிதே. (75)

சொல்லும் பொருளலச் சொல்லாப் பொருளலச் சொன்முடிவே
யல்லும் பகலுமற நிறைந்தானறி வானந்தமாய்
நில்லு மிதுநிலை நிட்டையென் றேமறை நிகழ்த்துதலாற்
புல்லும் பொருளல வேயெங்குந் தன்மயப் பூரணமே. (76)

போற்றி வணங்குதல் பூசித்து வாழ்த்தல் புறம்பு முள்ளு
மேற்றி யிருந்தது மென்ன கொலோ யெங்கு மெங்குமொன்றாய்த்
தோற்றி நிறைந்த சுயம்பிர காசச் சுடரொளிதான்
பாற்ற விடமெங்குந் தானாகி நிற்கும் பரம்பொருளே. (77)

பற்றுவ தெந்தப் பரமோ பரமதைப் பற்றுவர்யார்
சற்றும் பிறிவற்றுத் தன்மய மாகிய தத்துவமாஞ்
சித்துரு வென்னுஞ் சிவமே சிவமெனச் செப்புநெறி
பெற்றவர் பெற்ற பெருமை யிதுவெனப் பேசரிதே. (78)

பேசாப் பெருமை யுடையோன் றிருவடிப் பெற்றவர்தான்
நேசா னுபூதி நிலையாய் விளங்குவர் நிச்சயமா
யாசா னருள்விழிப் பார்வைய தாயறிவா னந்தமா
யீசா வென்வேத்தி யிருப்பார் தமக்கது வின்பமென்னே. (79)

கற்றது கற்றதெல்லாந் தனைவிடக் கற்றதென்னே
பற்றுத லற்றுப் பரமே சிவமெனப் பற்றுதலே
சிற்றுரு வென்றொரு தெய்வமுண் டேலந்தச் சின்மயனைப்
பெற்றது பெற்றது பேசாது மோனப் பெருமையினே. (80)

மனமென்னு மாயைத் திரையின்றிவாழு மகத்துவர்தான்
றனையன்றித் தத்துவ மெங்குளதோ சச்சிதா நந்தமாய்
நினைவின்றி நின்ற நிலையே நிலையுண்மை நிட்டையதாய்
வினையின்றித் தன்னிலை வீடாகப் பெற்றிடும் வித்தகரே. (81)

கண்ணி.

ஆதியந்தமின்றி யகண்டப் பெருவெளியாஞ்
சோதியருணேசனென்று சொல்லுஞ் சுகமிதுவே. (82)

ஆதித்தன்சோம னனலொளிக்கு மவ்வொளியாய்
சோதிக்கணெங்குந் துலங்கு மருணேச னென்றே. (83)

உண்ணாடித்தன்னிலையை யுற்றுணர்ந்தவக்கணமே
கண்ணாடிக்குண்முகம்போற் காணுமதுதானாயே. (84)

எல்லாமுடையவனை யெங்குநிறைகின் றவனை
யல்லாதுவேறறிவ ரார்காணருள்வடிவே. (85)

ஐயமொருக்காலுமிலா னாகாயம்போனிறைந்த
மெய்யன்றிருவருளை மேவுவதுமெய்யுணர்வே. (86)

ஒன்றேயுயிர்க்குயிரா யோங்குசிவானந்தமென
வன்றே யின்றென்று மமர்ந்தவருள்வடிவே. (87)

ஓவாச்சிவானந்த மோங்கியபேரின்பவெள்ளம்
வாவாவென்றோதி வருந்துநாளென்னாளோ. (88)

கற்றதுவுங்கேட்டதுவுங் கண்டதுவுங்கற்றுணர்விற்
சிற்றுருவாய்நின்ற சிறந்தமணிவிளக்கே. (89)

காலமொடுதேசவத்து கற்பனையென்றேயறிந்த
சீலமுறுயோகியர்கள் சிந்தைமணிவிளக்கே. (90)

கீழ்மேனடுப்பக்கங் கேழ்வியினுக்கெட்டரிதாய்
வாழ்வீருமக்கடிமை வாழ்த்துவதுயாதினியே. (91)

குற்றங்குவிந்தவுடற் கூறொழித்துத்தன்னிலையைப்
பெற்றபெரியோர்கட்பதம் பெற்றிருப்பதெந்நாளோ. (92)

கூறுங்கரணக் குறும்பரையுந்தானடக்கிப்
பேறுபெருந்தன்னிலமைப் பெற்றிருப்பதென்னாளோ. (93)

வா[illegible]மெய்ஞ்ஞானகுரு வள்ளலேநின்னருளைச்
சாலவுநானம்புகின்றேன் சாமியருணாசலமே. (94)

மெய்யடியாரேவலல்லால் வேறுமுத்திதானுமுண்டோ
பையவவையாலறியப் பகராயருணாசலமே. (95)

பற்றுதலைவிட்டுனது பார்வையான்மெய்யடியார்
குற்றேவல்செய்யவருட் கூட்டுமருணாசலமே. (96)

உள்ளதுணரா துளுத்தருறவ்வதனைத்,
தள்ளவரமே யருள்வாய் சாமியருணாசலமே. (97)

துற்குணத்தினான்மெலிந்த துன்பமெல்லாந்தீரவொரு
சற்குணத்தைத்தந்தருள்வாய் சாமியருணாசலமே. (98)

காமவிழிமாதர்களின் கண்வலையிற்சிக்காமற்
சேமநிதிபோலருளைச் செப்பாயருணாசலமே. (99)

கட்கஞ்சாசாராயக் கசடறுத்துநின்னருளை
நிற்போதையாலெனக்கு நேர்வாயருணாசலமே. (100)

வருந்துங்கவலைகெட மாறாச்சுவானுபவம்
பொருந்தும்படியருள்வாய் போதையருணாசலமே. (101)

மதுவைப்பரமாக மாந்தியுவராதவகை
பதுமத்திருவடியைப் பாலியருணாசலமே. (102)

ஈனர்புசிக்கு மிறைச்சிமதுவுண்ணாமல்
மோனரசம்புசிக்க மொழிவாயருணாசலமே. (103)

கள்வெறியினாலே காமவெறிக்கொள்ளாமல்
உள்ளுணர்வைக்கண்டிருக்க ஓதாயருணாசலமே. (104)

ராகாதிவிட்டுன்னை நானாகக்காண்பதற்கு
தேகாதியந்தவினை தீராயருணாசலமே. (105)

திரிபுடிகளற்றனது சேர்க்கைதந்த வென்சொருபம்
பொறிகளுக்குமெட்டாத போதமருணாசலமே. (106)

ஞானச்சுகவடிவாய் நாடோறுநில்லாமல்
ஈனச்சடவடிவா யிருந்தேனருணாசலமே. (107)

சேல்விழியாராசைவிட்டுச் சின்மய்மாய்நிற்பதற்கு
நூல்வழியேமெத்தநல்ல நோன்புவருணாசலமே. (108)

காலைப்பிடித்திழுத்துக் கண்கலக்கப்புட்டுழலும்
மாலையொழித்தருள்கண் மணியேயருணாசலமே. (109)

நில்லாததேகமதை நித்தியமாய்நம்புகின்ற
பொல்லாதபுல்லறிவைப் போக்காயருணாசலமே. (110)

நித்தியமாய்நின்றிலகும் நீக்கமற்றமெய்யுணர்வை
சத்தியமாய்தந்தருளுஞ் சாமியருணாசலமே. (111)

பாவனைகளற்றனது பழவடிவமாவதற்கு
தீவினையைநீக்கியருள் செப்பாயருணாசலமே. (112)

சமாதீவரமுறையாய்ச் சாதித்துமோனமுற
சமாதீயுள்வருவாய்ச் சாமியருணாசலமே. (113)

முக்குணத்துக்காதார மூலப்பிரகிருதி
யிக்கணத்திற்போக்கிடுவா யெந்தையருணசலமே. (114)

கருவிகரணுதிகளைக் கட்டறுத்துமேலான
நிருவிகற்பசமாதியைநீ நிகழ்த்தாயருணசலமே. (115)

அநித்தியத்தைநித்தியமென் ஞதரிப்பைநீக்கியென்னைத்
தனித்திருக்கவைத்தருள்வாய் சாமியருணசலமே. (116)

மாயாவிகார மயக்கமறுத் துன்னருளை
ஓயர்மல்நாடவரு ளுதவுமரு ணசலமே. (117)

ஆ திருப்பாடல்கள் 123-ம் இருடிப் புரோக்தம்.
இதைச் சார்ந்த துதியும் 18 உள்ளது.

**பரம கருணாநிதியான ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர்**
திருவாய்மலர்ந்தருளிய
**சுவாநுபவத் தோத்திரப் பாமாலை**
**முற்றிற்று.**

**கட்டளைக்கலித்துறை.**

கதந்தனை யுற்றுக் கலங்கிடா வண்ணமோ ரென்மனது
விதந்தனை யுற்ற விறுமல னேன்றவித மொழியால்
மதந்தனை யாக்கு மலமாயை நீத்தொரென் மாசுகத்திற்
றிதம்பெற வைத்தான் சிதம்பர ஞானேச தேசிகனே.

ஓம் தத்ஸத்.

---



70.008.

3/1124

# புத்தக விளம்பரம்.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளிய வேதாந்த சித்தாந்த சாரசங்கிரகம் தமிழ்மொழி பெயர்ப்பு. விலை அணா ... ... 0 8 0

கோயிலூர்க்கு சுமாஞ்சலி, இதில் சர்வ தேவதைகளுக்கும் ஷோடச அஷ்டோத்திர சத நாமார்ச்சனை, பஞ்சபுர்ாணம், சீடாசாரம், படத்தோடு சங்கராசாரிய சுவாமிகளின் சரித்திரம், சமாதி ஆலயபூஜாவிதி இவைகள் உள்ளன. விலை அணா ... 0 5 0

சமஸ்கிருத முதற் புத்தகம் (அச்சில்) 0 12 0

இப்புத்தகங்கள்
திருவண்ணாமலை ஈசான்னிய மடத்தில் கிடைக்கும்.

---

வேதசார சமுத்தரணமென்னுந் தோடக மூலமும் உரையும் ... ... 0 10 0

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெருவு,
சௌகார்பேட்டை, மதராஸ்.